# தத்துவபோதினி.

1866

பு. ௨.] சென்னைப்பட்டணம் ௧௮௬௬ௗ ஜனவரிமீ ௭௨. [இல. ௬.

[illegible]

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்.

## அட்டவணை.

விஷயங்கள்.



| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| ௧. கடவுள்துதி | ௧௮௫ | ௫. அர்த்தசாஸ்திரம் | ௧௯௧ |
| ௨. விளம்பரங்கள் | ௧௮௬ | ௬. நிருபங்கள் | ௧௯௩ |
| ௩. தத்துவபோதினி | ௧௮௭ | ௭. உபந்நியாசம் | ௧௯௯ |
| ௪. ருக்குவேதசம்ஹிதை | ௧௮௯ | ௮. சந்தாதாரர்கள் அட்டவணை | ௨0௮ |



சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

### கடவுள்துதி.

ஆசிரியவிருத்தம்.

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
முறவனந்தம் வினையினு
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
றெய்வமு மனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனன்ஞான
சிற்சத்தியா லுணர்ந்து

காரனந்தங்கோடி வருஷித்ததெனவன்பர்
கண்ணும் விண்ணுந் தேக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலேங்
கடவுளைத்துரிய வடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப் பணிகுவாம்.
தாயுமானவர்.

## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ள வர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....................க - கஉ - 0

இதற்குச் சந்தாதாரர்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணா வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்றாய் பயிண்டுசெய்தது,...........0 - அ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது.......0 - எ - 0

கஅசூச ௵ மேமாசம் முதல் கஅசூரு ௵ ஏப்பிரல்மீ௳ வ

ரையிலுள்ள தத்துவபோதி
னி பயிண்டுசெய்தது...... ௩ - 0 - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - ௧ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒருஅணுவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, ௨௰௨ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாக விருக்கும்.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியன்றவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

## தத்துவபோதினி.

சோதரர்களே! கடந்தபத்திரிகையில்பிரசுரமாகிய "தத்துவகாமி" யென்பவருடைய நிருபத்துக்கு இன்றுவிடைகூறுவதாயுரைத்திருந்தோமல்லவா. அவர்கேட்டவினாக்களை முறையேதொடர்ந்து விசாரிப்போம்.

௧-வது. மயிலம்முதலிய ஸ்தலங்களில் பேயாடுவதற்குஅந்தந்தஸ்தலங்களிலுள்ள விக்கிரஹங்களின் சக்தியேகாரணமாயிருக்கவேண்டுமென்பது முதல்வினாவின்கருத்தாக விருக்கின்றது. இதற்குவிடையுரைப்பதிலிரண்டு சங்கதிகளையோசிக்கவேண்டியிருக்கிறது. முதலாவதுபேயென்ப தொன்றுண்டோ, ௨-வது-உண்டெனில் அதையோட்ட இந்தவிக்கிரகங்களுக்குத் திறமுண்டோ வென்பனவாம். பேயுண்டோவென்பதைக் குறித்து முதலில் யோசிப்போம். அத்தன்மையானபதார்த்தமொன்றுண்டெனில், அதின்கொடுமைக்கு எவ்வகைமனிதரும் பாத்திரராயிருக்கவேண்டுமல்லவா. இது அனுபவத்திற்கிசையவில்லையே. இங்கிலீஷாரிலொருவரையாவதுபேய்பிடித்ததாய்நாம்கேட்டறியோம். நம்மவரிலும் புருஷரை அது பாதிக்கக் கண்டதுண்டோ ? பெண்களிலாவது ருதுவாவதற்குமுன்னும்,ருதுமாறினதற்குப்பின்னும் பேய்பிடித்ததாய்கேட்டதாவதுண்டோ ? இதுமுதலிய பலவிஷயங்களையோசிக்குங்கால் சூதகவாயுவென்று சிகிச்சைசெய்து அன்னியர் சுவஸ்தப்படுத்தும் வியாதியை நம்மவர்பேயாக்கிவிடுகின்றனரென்று ஏற்படும். இந்தவியாதிக்கு இங்கிலீஷில் ஹிஸ்டரியாவென்றுபெயர். இங்கிலீஷ்வாகடங்களில் இதற்கு சுவரூபவிசாரம்செய்வதைப் படித்துப்பார்ப்போமாகில், நாம்பேயென்று வழ

ங்குவது இதைக்காட்டிலும்வேறல்லவெ
ன்று திருடமாய் ஏற்படும். இந்தவியாதி
யுள்ளவரையில் ருதுக்கியதம்தப்பியிருக்
குமென்பதையும், சிலருக்குத் தீட்டேநி
ன்றுபோய்விடுவதையும், சிலருக்குப்பெ
ரும்பாடுண்டாவதையும் இவர்களில்தீட்
டுநின்றுவிட்டவர்கள்மாத்திரமேதலையை
விரித்துக்கொண்டாடுதல்.பளுவைத்தூக்
குதல, முதலியகோரகிருத்தி யங்களைச்
செய்வார்களென்பதையும்இந்தநோயொ
ழிந்தவுடனே கர்பமாவதுதரிக்கும்அல்ல
து ருதுக்கிரமமாவது சீரடையு மென்ப
தையும்சற்றுகவனிப்போமாகில், நமக்கு
இன்னுமதிகதெளிவுபிறக்கும். அன்றியும்
பேய்பிசாசுகளையேவுதல்சூனியம்வைத்த
ல் முதலியதொழில்களை நம்மவர் பரியா
யமாய்க்கொண்டிருக்கின்றனரல்லவா. இ
வற்றைச் செய்வோர் தங்கள்முயற்சிகளை
இங்கிலீஷார்மீதுசெலுத்தலாகாதோ? இ
வற்றின்சகாயத்தால் ஒருவனைக்கொன்று
விடுவதும் சாத்தியமென நம்மவர்நம்புகி
ன்றனரல்லவா. இதுஉண்மையாகில் ந
ம்மவருடைய துரபிமானங்களுக்கும், ம
தக்கோட்பாடுகளுக்கும்தீமைவிளைக்கும்
இங்கிலீஷாரையெல்லாம் ஒருநொடியில்
கொன்றுவிடலாமல்லவா. இப்படிசெய்
யசக்தனென்று எந்தமந்திரவாதி யாவது
வெளிப்பட்டுநிரூபித்துக்காட்டுவானாகில்
அவனுக்கு விருப்பமுள்ள பரிசையளிப்
போம்; அல்லதுஎங்கள்மீதுஇம்மந்திரப
லத்தைக்காட்டுவார்களாகில் இன்னும்அ
திக திருப்திகரமாயிருக்கும். இம்மந்திர
வாதிகளையிவ்வளவுதாண்டிவினவுங்கால்
அந்தமந்திரத்தில் நம்பிக்கையில்லாதவர்
மீது அதுஎறமாட்டாதென்று விடையு
ரைப்பார். இதினால்பேயாடுதல் முதலிய
கோராமைகளுக்குநம்மமனதுகாரணமே
யன்றி,பேயாவது அதையோட்டும் மந்
திரமாவது விக்கிரஹமாவ தல்லவென்று
தானாய்விளங்கும். மேஸ்தர் புஷலென்ப
வர் இந்தராஜதானியிற் செய்தஇந்திரஜா
லமஹேந்திரஜாலங்களைக்குறித்து நியூஸ்
பேபர்மூலமாயும்வேறுமார்க்கத்தாலும்ப
லர்கேட்டிருப்பார்களே! ஒருவனைப்பிண
மாய் நீட்டிவிட்டு அவன்தலையைஒருநார்
காலிமீதும், காலைமற்றொருநாற்காலிமீது

ம்வைத்து உடலைஅந்தரத்தில் தொங்கவி
ட்டு இவன்மேல் பலரேறிநின்றாலும் அ
வன்தேஹம்வளையாமையைநாம் நேராய்
க்கண்டோம். அன்றியும் ஒருபாத்திரத்தி
ல் புதியநீரைக் கொண்டுவந்துகொடுக்கு
ம்போது, அதுஒருவனுக்குப் பாலாயும்,
மற்றொருவனுக்கு எண்ணெயாயும் இன்
னொருவனுக்குச்சாராயமாயும் மைற்றொ
ருவனுக்கு சாணிநீராயும், இன்னும்பற்ப
லவிதமாயும்ருசிவிளங்குகின்றது. இதை
ப்பற்றி "ஓர்மயிலைவாசி" யென்பவர்கடந்த
பத்திரிகையில் ஒருநிருபமும்எழுதியிருக்
கிறார். இத்தன்மையானது ரபிமானங்களை
நீக்கவேண்டுமென்றேஎங்களில் ஒருவரா
கிய வ - இராஜகோபாலாசாரியர் வெகு
பொருளளித்து இந்தவித்தையைக்கற்று
க்கொண்டிருக்கிறார். வெகுவிரைவில் எ
ங்கள்சமாஜத்தாரனைவரும் அதைச்செய்
யசக்தராவாரென்று நம்புகிறோம். இப்
போது பேயாட்டுவோரையெல்லாம்நாங்
களாட்டுவோமாகில்பிறகேனும்தெளிவுபி
றக்குமென்பதில்சந்தேகமுண்டோ. பிர
கிருதத்தில்எங்களுடையமுன்காரியதரிசி
விளைக்கும் விந்தைகளைச்சாதாரணஜனங்
கள்கண்டால் அவருக்கு அனேகபேய்க
ளும், பிசாசுகளும் இக்ஷிணிகளும்வசமா
யிருப்பதாய்க்கொள்வார்கள். உண்மை
யோ அதுவல்ல. ஜனங்களுடையதேஹ
மனக்கூறுகளையனுசரித்து, அவர்கள்தே
கத்திலுள்ள எலெக்டிரிசிடியென்னும் ப
தார்த்தத்தை ஆகர்ஷித்துவிடுவோமாகில்
அவர்கள்நாமாட்டும் வழியெல்லாம் அடி
யேதீரவேண்டும். இந்தசூதசவாயுவொன்
றேயிதற்குக் காரணமென்றுநாங்களுரை
க்கவில்லை. துர்நடத்தையுள்ளசிலஸ்திரீக
ள்இவ்வாறுவேஷம்கொள்வதும்அருமை
யல்ல. சிலர்இயற்கையிலேயெபயங்காளி
களாகவும் சொல்வதையெல்லாம்நம்பிவி
டுவோராகவுமிருக்கின்றமையாலும் அக்
கம்பக்கத்தாருரைக்கும் கதைகளைக்கேட்
டுப்பேயென்பதொன்றிருப்பதாக நம்புகி
ன்றமையாலும், அவர்களைபேய்பிடித்ததா
ய்எண்ணிக்கொள்ளும்படிச்செய்வதுவெ
குகடினமல்ல. அவர்கள்மனதில்இத்தன்
மையான பிரமமுண்டானபிறகு, கண்ட்
துபாம்பு கடித்ததுமாங்கொட்டை யென்

னும்கதையினல் மனதின்சுவபாவம்விளங்குமாகையால்அவர்கள் அதற்கிசைந்தபடிநடிப்பதுபுதுமையன்று. ஆகையால்குறிப்பாய்ப்பரிக்ஷித்துப் பார்ப்பவருக்குபேயென்பதே கிடையாதென்றும், கேவலம் வியாதியோ பிரமமோ அத்தன்மையான கொள்கைக்குக் காரணமென்றும் நன்றாய்விளங்கும்.

பேயென்பதே கிடையாதபோது, அதையாட்டிவிக்கும் சக்தி விக்கிரகங்களுக்குண்டென்பதை யெப்படி நம்பக்கூடும். மயிலம் திருப்பதி, திருவெவ்வளூர், முதலியஸ்தலங்களில் பேயாடுவதாய்க் கேட்டும் கண்டும் அதெல்லாம்உண்மையென்கிற நம்பிக்கையைப் பூர்ணமாய்ப்பெற்றும், தங்களைப்பேய்பிடித்திருக்கிறதென்னும்பிரமத்துக்கு அடிமையாயுமிருக்கிற பெண்கள் ஆடுவது புதுமையன்று. ஆகிலும் அதற்குக்காரணம் அவர்கள் மனதின் நிலையேயன்றி விக்கிரகத்தின் சக்தியன்று. உண்மையில் இவ்விக்கிரகங்களில் ஒருசக்தியுண்டெனில் அவற்றைக்கல்லும் செம்புமென்று கொண்டிருக்கும் எங்கட்கு அவையெதாவது எருதுன்பம் விளைக்கவேண்டுமல்லவா. அல்லது அந்தஸ்தலங்களில் கொள்ளையிடுவோரைசிக்ஷிக்கவேண்டுமல்லவா. எமாந்தவர்களையாட்டிவிக்கமாத்திரம் அதற்குச்சக்தியுண்டேயன்றி, அதைநம்பாதவர்கள் ஜோலிக்கு அது வரமாட்டாதென்று சிலருரைப்பார். எங்களுக்குப்பயந்துகொண்டு அயலாரைமெரட்டும்சக்தி யதற்குண்டென்பதை விட அதைத்தெய்வமாகக்கொள்ளும்பேதமையே யதற்குக்காரணமென்றெனக்கொள்ளக்கூடாது. இதில்ஐயமுற்றிருக்கும் தத்துவகாமி யென்பவர் அவ்விக்கிரகங்களைக்கல்லும் செம்புமென்று மதித்துக்கொண்டு அதைப்பலவழியிலும் அவமதித்தபோதிலும் அதுயாதொன்றும்செய்யமாட்டாமையைக்கண்டு தெளிவார். அவர்நிஷ்பக்ஷபாதமாய் விசாரிக்கத்தொடங்கியபடியால் உண்மை வெகுஎளிதில்அவருக்கு வெளியாகுமென்பதில் சந்தேகமேயில்லை.

மற்றஇரண்டுவினக்களுக்கும், இன்று விடையுரைத்து முடியாதாகையால் வருகிறபத்திரிகையில் தொடர்ந்து விசாரிப்போம்.

---

இந்நகரவாசியாகிய "மெய்ம்மை கூறுவோனெ"ன்பார் எழுதியநிருபம்இன்றிய பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கின்றதல்லவா. அதைக்குறித்து எங்களபிப்பிராயத்தை வருகிற பத்திரிகையில் விசாரிப்போம்.

---

## ருக்குவேதசம்ஹிதை.

(தொடர்ச்சி.)

### சூக்தம், ௩. (௰௪.)

[ருஷியும் பாவும் முன்போல. இந்தசூக்தமும் அதில் அங்கங்கேகூறியபலதேவதைகளுக்குரியது.]

### வர்க்கம், ௨௯.

௧. ஐபிரக்நே துவோ கிரோ விஶ்வேபி꞉ ஸோமபீதயே, தேவேபிர்யாஹி யக்ஷி ச.

அக்கினியே இந்த எல்லாத்தேவர்களோடுங்கூட, ஸோமபானத்தின் பொருட்டு* (எங்களுடைய)பூஜையினிடத்தும் ஸ்தோத்திரங்களினிடத்தும் வாரும் (வந்து)யாகமும்பண்ணும்.

௨. ஆத்வா கண்வா அஹூஷத க்ருணந்தி விப்ர தே தியஃ, தேவேபிரக்ந ஆகஹி.

மேதாவியே, ருத்துவிக்குகள்†உம்மையழைக்கிறார்கள்; உம்முடைய செய்கை

---

* ஸோமபீதயே, இதற்கு "ஸோமபானத்தோடுகூடிய யாகத்தின் பொருட்டு"என்று உரை.

† கண்வாஃ வினைப்பகுதி கண எலி (ஸ்தோத்திரமுதலியவற்றால்) ஒலி செய்கிறவர்கள் கண்வாஃ "மேதாவிகள்" என்றுங்கொள்ளலாமென்று பாஷியத்திலுரைத்திருக்கிறது.

களைச்சொல்லுகிருர்கள். ஓ அக்கினியே தேவர்களோடுகூடவாரும்.

௩. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌾𑌯𑍂 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑍂𑌷𑌣𑌂 𑌭𑌗𑌮𑍍, 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌂 𑌗𑌣𑌮𑍍.

இந்திர வாயுக்களையும், பிருஹஸ்பதியையும், அக்கினியையும், பூஷனையும், பகனையும், ஆதித்தியர்களையும், மருத்துக்களின் கூட்டத்தையும் ஓஅக்கினியே யஜியும்.

௪. 𑌪𑍍𑌰 𑌵𑍋 𑌭𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤 𑌇𑌨𑍍𑌦𑌵𑍋 𑌮𑌤𑍍𑌸𑌰𑌾 𑌮𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌣𑌵𑌃, 𑌦𑍍𑌰𑌪𑍍𑌸𑌾 𑌮𑌧𑍍𑌵𑌶𑍍𑌚𑌮𑍂𑌷𑌦𑌃.

உங்களின்பொருட்டு, திருப்திகரமும், களிப்பிக்கின்றதும், மதுரமானதும் சொட்டுகின்றதும், * பாத்திரத்தில் † நிற்கின்றதுமாகிய, ஸோமம்மிகுதியாய் சம்பாதிக்கப்படுகிறது.

௫. 𑌈𑌳𑌤𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌵𑌸𑍍𑌯𑌵𑌃 𑌕𑌣𑍍𑌵𑌾𑌸𑍋 𑌵𑍃𑌕𑍍𑌤𑌬𑌰𑍍𑌹𑌿𑌷𑌃, 𑌹𑌵𑌿𑌷𑍍𑌮𑌨𑍍𑌤𑍋 𑌅𑌰𑌂𑌕𑍃𑌤𑌃.

அக்கினியே, தேவர்களை யிச்சிக்கிறவர்களாகிய‡ருத்துவிக்குகள்(தரையில் பரப்பும்பொருட்டு)வெட்டினதர்ப்பையையுடையவர்களாயும், ஹவிசைக் கொண்டவர்களாகவும், அலங்கரிக்கிற வர்களாகவும், உம்மைப்புகழ்கிருர்கள்.

௬. 𑌘𑍃𑌤𑌪𑍃𑌷𑍍𑌠𑌾 𑌮𑌨𑍋𑌯𑍁𑌜𑍋 𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 𑌵𑌹𑍍𑌨𑌯𑌃, 𑌆 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌸𑍋𑌮𑌪𑍀𑌤𑌯𑍇.

துலக்கமான முதுக்குள்ளவைகளும் * மனதினல் பூட்டப்படுகிற வைகளுமாகிய எந்தக்குதிரைகள் † உம்மை(ரதத்தில்) எந்துகின்றனவோ (அவைகளால்) தேவர்களை ஸோமபானத்தின்பொருட்டுக்(கொண்டுவரும்.)

## வர்க்கம்-௨௭.

௭. 𑌤𑌾𑌨𑍍𑌯𑌜𑌤𑍍𑌰𑌾𑌁 𑌋𑌤𑌾𑌵𑍃𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑍇 𑌪𑌤𑍍𑌨𑍀𑌵𑌤𑌸𑍍𑌕𑍃𑌧𑌿, 𑌮𑌧𑍍𑌵𑌃 𑌸𑍁𑌜𑌿𑌹𑍍𑌵 𑌪𑌾𑌯𑌯.

அக்கினியே, யஜிக்கத்தக்கவர்களும் யக்கியத்தை விருத்திபண்ணுகிறவர்களும், மனைவிகளோடுகூடியவர்களுமாகிய அவர்களை ‡ (சன்னிதர்)ஆக்கும் அழகியநாவினையுடையவரே, மதுரமாகிய (ஸோமத்தின் அம்சத்தை) நுகரச்செய்யும்.

௮. 𑌯𑍇 𑌯𑌜𑌤𑍍𑌰𑌾 𑌯 𑌈𑌡𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌤𑍇 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑍁 𑌜𑌿𑌹𑍍𑌵𑌯𑌾, 𑌮𑌧𑍋𑌰𑌗𑍍𑌨𑍇 𑌵𑌷𑌟𑍍𑌕𑍃𑌤𑌿.

ஓ. அக்கினியே, எவர்கள் யஜிக்கத்தக்கவர்களோ எவர்கள்புகழத்தக்கவர்களோ அவர்கள் (யாவரும்) ஹவிசுகொடுக்குங் காலத்தில், (உம்முடைய)நாவினல் மதுவின் § (அம்சத்தை) க்குடிப்பார்களாக.

௯. 𑌆𑌕𑍀𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍋𑌚𑌨𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌁 𑌉𑌷𑌰𑍍𑌬𑍁𑌧𑌃, 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌹𑍋𑌤𑍇𑌹 𑌵𑌕𑍍𑌷𑌤𑌿.

மேதாவியாகியஹோதாவானவர் ¶ வி

---

* 𑌦𑍍𑌰𑌪𑍍𑌸𑌾𑌃=𑌬𑌿𑌨𑍍𑌦𑌵𑌃.

† 𑌚𑌮𑍂𑌷𑌦𑌃 பகுதி 𑌚𑌮𑍂 சாப்பாடு; எதினின்று சாப்பிடுகிருர்களோ அதுவாகியபாத்திரம் 𑌚𑌮𑍂𑌃; அதில் (𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑌿) இருக்கின்றவை 𑌚𑌮𑍂𑌷𑌦𑌃.

‡ 𑌅𑌵𑌸𑍍𑌯𑌵𑌃; 𑌅𑌵 ரக்ஷி; ரக்ஷிக்கின்றமையால் தேவர்கள் 𑌅𑌵𑌾𑌃; அவர்களை மிகவிரும்புவோர் 𑌅𑌵𑌸𑍍𑌯𑌵𑌃.

* 𑌘𑍃𑌤𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌃 பிரகாசிப்பு; 𑌘𑍃𑌤 பிரகாசிப்பிக்கப்பட்ட, 𑌪𑍃𑌷𑍍𑌠 முதுகு.

† 𑌵𑌹𑍍𑌨𑌯𑌃=இழுப்பவை.

‡ இந்திராதிதேவர்களை.

§ மதுரமானஸோமத்தின்.

¶ அக்கினி.

டியற்காலம் உணர்ச்சியுறும் * சகலதேவர்களையும்,சூரியனுடையவானத்தினின்று இவ்விடம் கொண்டுவரக்கடவது.

க0. விஶ்வேபிஃ ஸோம்யம் மத்வக்ந இந்த்ரேணவாயுநா,பிபாமித்ரஸ்யதாமபிஃ.

ஓ அக்கினியே,எல்லாரோடும், இந்திரரோடும் வாயுவோடும், மித்திரனுடைய, தேஜசுகளோடும், † ஸொமசம்பந்தமான மதுவை ‡ க்குடியும்.

கக. த்வம்ஹோதா மநுர்ஹிதோக்நேயஜ்ஞேஷுஸீதஸி, ஸேமந்நோ அத்வரம்யஜ.

அக்கினியே மனிதனால் சம்பாதிக்கப்பட்ட ஹோதாவாகிய நீர் யக்கியத்தினிடத்துஉட்கார்ந்திருக்கிறீர். அப்படிப்பட்டநீர் இந்தநம்முடையயக்கியத்தைநிறைவேற்றும்.

கஉ. யுக்ஷ்வா ஹ்யருஷீ ரதேஹரிதொதேவரோஹிதஃ, தாபிர்தேவாம் இஹாவஹ.

தேவனே, வேகமும், இழுக்கஉரமுமுள்ள (உம்முடைய) பெண்குதிரைகளாகிய ரோஹித்துக்களைத் தேரில்பூட்டும். அவைகளைக் கொண்டுதேவர்களை இங்கே கொண்டுவாரும்.

## அர்த்தசாஸ்திரம்.

### சம்பளங்களைப்பற்றியும், ஜனசங்கியைப் பற்றியும்.

(தொடர்ச்சி.)

ஒரு தேசத்தில் முதல்விருத்தியாகுந்தோறும் அதினால் ஜீவிக்கப்பட்டஜனங்களின் சங்கியை அதிகப்பட்டபோதிலும்,வேலைக்காரர்களின் சம்பளமும் உயருமென்று கொள்ளக்கூடாது. சீனதேசம் வெகுசெல்வத்தைப்படைத்ததாயினும் அதில்வேலைக்காரருக்குக்கொடுக்கப்படும் சம்பளம்மற்றதேசங்களிலெல்லாம்விட வெகுஅற்பமாயிருக்கிறது.அத்தேசத்திற்குப் போய்வந்தவர்கள் அவ்விடத்திய ஏழைஜனங்கள் படும் வருத்தத்தைச் சொல்லக்கேட்கக்கூடவில்லை. அவர்கள்அவ்வாறு வறுமையானஸ்திதியி லிருப்பதற்குக் காரணம் சோம்பேறித்தனமல்ல. ஏனெனில் அவர்கள்கைத்தொழிற்கருவிகளைக்கொண்டு தெருத்தெருவாக அலைந்து வேலைகொடுக்கும்படி கெஞ்சிக்கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுவிஷயமாகச் சற்றுவிசாரிப்போமாயின் அவர்கள்வறுமைக்கு விசேஷ ஜனசங்கியையே காரணமென்றும்;அத்தேசத்தில் முதல் விசேஷமா யிருந்தபோதிலும் அதிலுள்ளஜனங்களெல்லாரையும்காப்பாற்றப்போதாததாயிருப்பதாயும் விளங்கும். ஆகையால்சம்பளங்கள் முதன்மீதே சார்ந்திருப்பதில்லையென்றும் அது எத்தினைபேரைக்காப்பாற்றத்தக்கதாயிருக்குமோ அதின்மீது சார்ந்திருக்குமென்றும் தெரிந்து கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இவ்விஷயம் வெகுஅற்பமாயிருந்தபோதிலும் அதைச்சீராகஅறிந்து கொள்ளாத்தினாலே அர்த்த சாஸ்திரத்தில் வெருவிததப்புகள் உண்டாய்க்கொண்டுவருகின்றன. சீனதேசத்தில் இப்போதுள்ளதைக்காட்டிலும் செல்வம் பதின்மடங்கு அதிகமானபோதிலு மதின்ஜனங்கள் பதின்மடங்கு விருத்தியாவார்களேயாகில் அவர்களுக்கிப்போது கிடைக்கும் சம்பளத்தைவிட விசேஷமாகக் கிடைக்கமாட்டாது. அமரிக்காவிலோ முதல்சுவல்பமா யிருந்தபோதிலும் சம்பளங்கள்அதிகமாயிருக்கின்றன. இதற்குக்காரணம் அவ்விடத்திலுள்ள ஜனசங்கியை அற்பமாயிருப்பதுந்தவிர அதிலுள்ளதனம் யூரோப்பிலுள்ளதேசங்களிலிருப்பதைக்காட்டிலும் கொஞ்சமாயிருந்தபோதிலும், அத்தேசத்தின் பிரஜைகளுக்கு வேண்டியஅளவுக்குமிஞ்சி யிருப்பதுந்தான். அமரிக்காவிலும் புதிதாயக் குடியேறப்பட்ட இதரநாடுகளிலும் ஜனம் அடர்ந்திருக்கமாட்டாது. அவ்விடங்களில் முதல் அதிவேகமாய்ப்பெருகுமாகையால் வேலைக்காரர்கள் சம்பளங்களும் உயர்ந்தேயிருக்கும். பூமி விஸ்தாரமாயும் செழிப்பாயும் பயிரிடுவேலைக் காரர்கள் அரிதாயும் உள்ள இடங்களில் நிலத்தைப்படைத்தவர்கள் வேலைக்காரரைபோட்டியின்மீது வைத்துக்கொள்ள எத்தினப்படுவார்கள். அப்போதவர்கள்கூலி அதிகமாகக்கேட்பார்கள். இவ்வாறு சம்பங்கள் உயர

---

* உஷர்புத்யஃ,"விடியற்காதம் யாகத்துக்குப்போக நினைப்புறுகின்ற" எனவுரை.

† தாமபிஃ "பிரகாசமான ரூபவிசேஷங்களோடும்"எனவுரை.

‡மதுரமான அம்சத்தை எனவுரை.

த்தொழிலாளிகள்நிலத்தைவிலைக்குவாங்கச
க்தியுள்ளவர்களாகிறார்கள். தொழிலாளிக
ள்நிலத்தைப்படைத்தவர்களாகப் புதிதாய்க்
குடியேறியவர்களும்,மென்மேலும்உற்பத்தி
யாகும்குடும்பங்களும் தொழிலாளிகளாவா
ர்கள். ஆகையால் அமரிகாதேசத்தில்உயர்
ந்தசம்பளங்கள், நிலங்களுக்குச் சொற்பவி
லை, ஆகிய இவ்விரண்டு பிரயோஜனங்களும்
இருக்கின்றன. ஓர்புதியநாட்டில் மற்றோர்
நாகரீகமுள்ளஜாதியார் குடியேறுங்கால் அ
வர்கள் சொத்துவம்நிலைக்கும்படி சட்டதி
ட்டங்களையேற்படுத்த ஒழுங்கான இராஜா
ங்கத்தை ஸ்தாபிப்பார்களாகில், அத்தேசம்
அமோகமாய்ச் செழித்துஅதிவிருத்தியடை
யும். அமரிகாவில் புதிதாய்க் குடியேறப்
பட்டஸ்தலங்களில் விசேஷப்பயிற்சியுள்ள
பயிர்த்தொழிலாளிகள் ஐரோப்பியரதுகரு
விகளைக் கைக்கொண்டு ஓய்வின்றிக்காடுகர
ம்புகளைத் திருத்திப் பயிரிடுவதினால் ஒருவி
தகுறைவுமின்றியாவரு மதிக செல்வத்துட
ன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்
களுடையமுதல் அமோகமாய்ப்பெருகியிரு
ப்பதை அவர்களது ஜனசங்கியையினா லறி
ந்துகொள்ளலாம். குடும்பங்களைச் சம்ரக்ஷ
ணைச்செய்வதற்குவேண்டியபொருளை வெகு
விரைவில்அமரிக்காதேசத்தார்பெறக்கூடுமா
கையால் அவர்களில் பருவகாலத்தில் விவா
கங்கள்நடந்து விசேஷமாக மக்களைப் பெறு
கின்றனர், குழந்தைகளும்சீராகப்போஷிக்க
ப்பட்டவர்களாய் நோயின்றி சுசமாயிருக்
கின்றனர். யூநைடெட்டுஸ்டெட்ஸு என்னும்
நாட்டில்ஜனசங்கியை உரு-வருஷத்திற்குஒ
ருதரமிரட்டிக்கிறதெனில் அவிடத்தில்இறப்
பைவிடபிறப்புஅதிகமென்பதுதானாய்விளங்
கும். ஜனசங்கியைஉயர்ந்தால் சம்பளங்கு
றையாதாவென்றாலோ இங்கு அவ்வாறல்ல,
ஏனெனில் ஜனசங்கியைவிட முதல் அதிக
மாய் வளர்ந்துகொண்டிருக்கிறது. அப்படி
யுள்ளவரையில் சம்பளங்கள் உயருமேயன்
றி குறையமாட்டா. இதுவரையில் அமரிக்
காவைப்பற்றி சொன்னதையெல்லாம் யூனை
டேட்ஸ்டேட் ஸென்னுமொருநாட்டுக்கு மட்
டில்பொருந்தும். அவ்விடத்தில்குடியரசே
ற்பட்டு எல்லாக்குடிகளுடைய சொத்தும்
செம்மையாய் ஆதரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்
பெயின்தேசத்தார் குடியேறியிருக்குமிடங்
களில் இவ்வாறுசீராகதுரைத்தனம்நடத்தா
மையால் அங்கிருக்கும் குடிகள் அவ்வளவ
திகமாய் விருத்தியடைவதில்லை அமரிகாக
ண்டத்தில் ஸ்பெயின்தேசத்தார் கைக்கொ
ண்டிருக்கும் நாடுகளில் மிகவும் செழிப்பா
னதாகிய "மெக்ஸிகோ"என்னும் நாட்டில்
சஅ-வருஷம் சென்றாலொழிய ஜனசங்கி
யை இரட்டிப்பதில்லை. அமரிக்காவைவிட
இங்கிலாண்டிலுள்ள ஏழைகள் தாழ்ந்தஸ்தி
தியிலிருப்பதற்குக் காரணம் அமரிக்கா புதி
தாய்க் குடியேறப்பட்ட தேசமானதால் அ
தில் முதல்விருத்தியாகிறாப்போல் பழயநா
டாகிய இங்கிலாண்டில்வளராததேயாம். ஜ
ன் விருத்திக்குத்தக்கபடி செல்வம்விருத்தி
யாகாவிடில் சம்பளங்கள் குறைந்துஏழைஜ
னங்கள்திநேதிநேக்ஷீணதசையையடைவார்
களென்பதிற்சந்தேகமில்லை. கிடைக்கத் த
க்கஉணவுக்கு மிஞ்சி எப்படி ஜனவிருத்தி
யாகலாமென்று சந்தேகந்தோன்றலாம் சு
த்தமாக உணவின்றி உயிர்வாழ்வதரிதாயினு
ம் உணவுக்குக்குறைவுநேரிடுங்கால் அதிசய
த்துடனும் செழிப்புடனும் வாழாவிடினும்
அரைவயிற்றுக்குப்புசித்துப் பிழைத்திருக்க
லாம். ஆகிலும் இன்னிலையிலுள்ளநாடு வி
ருத்தி யடையமாட்டாது. இம்மாதிரியாக
வே ஏஷியாகண்டத்தில் இராஜாங்கம் ஒழு
ங்கற்று சொற்றுக்கு பத்திரமின்றி கொடுங்
கோன்மன்னர் அரசாக்ஷிபூண்ட சிலநாடுக
ள் க்ஷீணித்துப்போயின. ஆனால் இங்கிலா
ண்டில் அரசாக்ஷி மிகவும்சீர்பெற்றுப் பெரு
ம்பயன்களளிக்கத் தக்கதாகையால்மேற்கூ
றியவாறு அதுவும் க்ஷீணதசையை யடைய
மாட்டாதென நம்பலாம். இங்கிலாண்டில்
ஜனசங்கியை யேறிக் கொண்டிருந்தபோதி
லும் ஒவ்வொருவனும் பெரும்செல்வம் அதி
கரித்துக்கொண்டேயிருக்கிறது. அதில்முன்
னிருந்த ஜனங்கள் நார்த்துணிகளையாவது
ஜோடுமேஜோடுமுதலிய வைகளையாவதுபெ
ற்றிருக்கவில்லை. மேலும் முற்காலத்தில்செ
ல்வர்கள்வீட்டிலிருந்த சாமான்களைக்காட்
டிலும் இக்காலத்தில் ஒருசாமானியகுடிசை
யில் இருப்பது சிரேஷ்டமாயிருக்கிறது. ஆ
கையால் ஜனசங்கியை விருத்தியாவதினா
லேயே தனம் விருத்தியாகுமென்று எண்ண
க்கூடாது. மற்றொருதேசத்திலிருந்து நல்
லவேலைத்திரமுள்ள சிலர் குடியேறுவதினா
ல்மாத்திரம் ஜனசங்கியை விருத்தியடை
யுமேயாகில் அப்போதுஜனவிருத்தியால்தன
விருத்தியுமுண்டாகுமென்றுகூறலாம். அப்
படிக்கின்றி குடும்பவிருத்தியுண்டாவதால்ஜ
னவிருத்தி யுண்டாகத்தக்கதா யிருப்பதால்
கேவலம் தாய்தந்தைகள்போஷணையினாலே
யே பிழைத்திருக்கத்தக்க சிசுக்கள்பிறப்ப
தால் என்ன தனவிருத்தியுண்டாகும்? இவ்
விதசன விருத்தியால் தாய்தந்தைகளுக்குஅ
திகவருத்தமுண்டாகி தேசமும் பலமொடுங்
கி வறுமைக்குவந்துவிடும்.

குழந்தைகள் கைம்மாறுஈன்றாதுபுசித்து
த் தாய்தந்தைகளுக்கு வருத்தத்தையும்துக்
கத்தையும் தருவதேயன்றி அவர்கள் பிரயா

சைக்குப்பயனளிக்கும் பருவத்துக்குவராது நசிக்கும். இதுவேகோரமாயிருக்கினும் குழந்தைகள் முழுதும்பட்டினியுடன் இறப்பதாகக் காணப்படவில்லை. ஒருபெரியகுடும்பத்தைப்படைத்த தாயானவள் தன்னுழைப்பையும் கவனத்தையும் குழந்தைகளைச்சீராட்டிநற்பயிற்சியுண்டாக்குவதில்செலுத்தாமல் வருமையின் கொடுமையினால் அவைகளுக்குணவுதேட வெளியிற் றிரியவேண்டியிருக்கிறது. இந்நிலைமையில்செம்மையாய்ப்போஷிக்கப்படுதல், பரிசுத்தமாயிருத்தல், நற்காற்று, நற்சோறுமுதலியஅங்கங்களை அனுபவிப்பதற்கில்லாமல் பலவித நோயால்வருந்தி துர்பலமடைந்து முதலில் எதிர்படும் தொத்துவியாதிக்கு இரையாகவிழுகின்றன. நமது தேயங்களில் வைசூரிமுதலிய தொத்து நோய்கள் பெரும்பாலும் ஏழைஜனங்களுக்கே நேரிடுவதற்கு இதுதான்காரணம். நல்லபோஷணையும் பலமுமுள்ளசெல்வர்களுக்கு அந்நோய்கள்காண்பது வெகுஅறிது.

அபரிமிதமான ஜனவிருத்தியினால் நேரிடத்தக்கதீங்குகள் குழந்தைகளிடத்தில் மாத்திரம் காணலாமென்று கொள்ளக்கூடாது. ஒருநோயாளி வைத்தியமூலமான உதவியாலும் தகுந்தபத்தியத்தினாலும் அந்நோயைவிட்டு நீங்கத்தக்கவனாயிருந்தபோதிலும் அவ்விரண்டிலொன்றையாவது அவனடையக்கூடாமையாயிருந்தால் அவன்சாவான். சுகசரீரியும், வயதுசென்றவும், ஆன ஏழைஸ்திரீகளுக்கு வேலையின்மையும், அயலாருதவியும்வேண்டியிருக்கும். அவைகிடையாததால் அவர்கள் சீக்கிரத்தில்மடிக்கிறார்கள். உயிர்வாழ்க்கைக்கு அவசியமானவைகள் தேசத்தின் சீதோஷ்ணபேதங்களாலும் தேசாசாரங்களாலும்மாத்திரம்மாறுவதன்றிஒவ்வொருவனுடையவும் பிராயம், பால், மூப்பு ஆகிய இவைகளாலும் மாறலாம். இப்படிப்பட்ட ஆவசியகமானவஸ்துக்கள் குறைவுபடுங்கால் சாவுவிளைகின்றது. அகப்படத்தக்க உணவுக்குமிஞ்சி ஜனவிருத்தியாவது கீழ்வகுப்பினருடைய விவேகமின்மையினால்மாத்திரமேயன்றி மேல்வகுப்பினருடையயோசனையற்றநடத்தையாலும் சிலவேளை விளைகின்றது. அதாவது ஏழைகள் விரைவில் விவாகம்செய்துகொள்ளும்படி யுதவுவது, உணவுவிசேஷமாயுள்ளகாலத்தில் அதிக ஜனவிருத்தியுண்டாகுமாயின் அது தேசத்துக்கு ஒப்பற்ற பயனையளிக்குமென்று கூறியிருந்தோமல்லவா. செல்வத்தில்வளர்ந்த சிறுவர்கள் சவுக்கியமும் வலிமையுமுள்ள யவ்வனத்தையடைந்து தங்கள்நாட்டைக்காப்பாற்றத்தக்க பலத்தையும் அதற்கு ஆக்கமளிக்கத்தக்க சரீரப்பிரயாசையையு மடைகிறார்கள். இதையறியாதவர் காரண காரியவியவஸ்தையையுணராத எப்பொழுதும் ஜனவிருத்தியினாலேயே தேசத்தில தனவிருத்தியுண்டாகுமென்று தப்பபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வபிப்பிராயங்கொண்டே சாதாரணஜனங்கள்மாத்திரமேயன்றி துரைத்தனத்தாரும் பாலியவிவாகத்தையும் குடும்பவிருத்தியையுமே வெகுசாய்ப் பாராட்டிவந்தார்கள். இவ்விஷயம் வருகிறபதிப்பில்தொடர்ந்து விசாரிக்கப்படும்.

---

## நிருபங்கள்.

### வியாசமார்க்கவினாவிடை.

நேரிசைவெண்பா.

வேதசமாஜத்துநித்து வீரதத்துவபோதினியே.
நீதவியாசமதநிட்சயநீ-வாதின்றி
இன்பமாய்க் கூறுதலா லின்னொருமதத்தைசிலர்
நம்புவரோ வில்லையினிநாடு.

வினா வியாசமார்க்கமென்பதென்ன?

விடை. வேதவியாசரால்நிர்மாணிக்கப்பட்டவழியென்பதாம்.

வினா. அவரார்?

விடை. பஞ்சபூதங்களில்லொன்றாகிய அப்பு அம்சமென்று சொல்லப்படும்.

வினா. அப்பு அம்சம்அவ்வவதாரமாக வரவேண்டியதென்ன?

விடை. உலகில்பிறக்குஞ் சீவர்கள்உய்யும்பொருட்டு பிரம்மத்தினுடைய ஆக்கியையால்வந்தது.

வினா. இவருக்குமுன்சீவர்கள்உய்யும்படியானவழியில்லாதிருந்ததோ?

விடை. பிரும்மம்எப்போ சீவர்களைப்படைத்ததோ அப்போதே அவர்கள் நடந்துக்கொள்ளும் படியான நிபந்தனைக்கு வேதங்களைக் கொடுத்தது. ஆனால் அவ்வேதங்களின்உண்மையைப் பிற்காலத்தில்சீவர்கள்செம்மையாய்த் தெரிந்துகொள்ளாமல் மாறுபட்டுநடந்துகொண்டதால் அவரை அனுப்பவேண்டியதாயிற்று.

வினா. வியாசர் உற்பவித்தபின்பு என்னசெய்தார்?

விடை. அவ்வேதங்களில்பின்பு சீவர்களால் ஏறியிருந்த பிழைகளைக் களைந்து நான்குவேதமாகப் பிரித்து அதில்சரியை, கிரியை,யோகம், ஞானம்என்கிறவழிகளைஏற்படுத்தினர்.

வினா. சரியை,கிரியை,என்பதென்ன?

விடை. யாகங்களுக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக்கொள்ளுதலும் அந்தயாகங்களில் மந்திரங்களின்படி அவிர்ப்பாக முதலானவை கொடுத்தலுமாம்.

வினா. யோகஞான மென்பதென்ன?

விடை. பஞ்சேந்திரியங்களின் வழியே மனதைச்செலுத்தாமல்ஆறுதாரங்களில் நிஷ்டைகூடி யிருத்தலும் அதனருள்பெற்று இப்பிறவியில்கருமங்களைக்கழித்துபிரும்மத்தில்சந்தோஷித்திருத்தலுமாம்.

வினா. சரியைகிரியை அனுஷ்டித்தவர்கள் என்னபெறுவார்கள்?

விடை. தேவருலகப் போகங்களைப்பெறுவார்கள்?

வினா. யோகஞானத்தை அனுசரித்தவர்கள் என்னபெறுவார்கள்.

விடை. என்றும் அழிவில்லாதபிரும்ம சந்நிதானத்தில் சந்தோஷமாயிப்பார்கள்.

வினா. இப்படியிருந்தால் சரியைகிரியைஎன்பது விக்கிரகாராதனைக்குடடந்துக் கொண்டிருக்கிறதே அதுவும்வியாசர் சொன்னதாக வேபுராணங்களில்சொல்லியிருக்கிறதே அதேனப்படி?

விடை. தப்புந்தாறுமாறுகவயித்தியவாகடசாஸ்திரங்களைச் செய்தோர் அகஸ்தியர்பேரிலேற்றியது போல் தங்களுக்குத் திரவியமளித்தோர் கருத்துக்கிசைய தாறுமாறுக ஸ்தலபுராணங்களையும், காவியங்களையும் பாடினவர்களும் வேதவியாசர்பேரி லேற்றினர்கள். இன்னும்விவரமாக அறிய விரும்புவோர் வேதசமாஜவிண்ணப்பம் என்கிற புத்தகத்தைப் படித்தால் விளங்கும்.

வினா. ஆனால் அவர்கள்கருத்துவிக்கிரகாராதனைக்கூடாதென்பதோ?

விடை. கூடாதென்பதே ஆனால்அவர்கள்கருத்துநூதனமல்ல. புராதனமாகிய வேதாந்தத்தின் யோகஞானகருத்தேயாம். அதுகல்விகளைக்கற்றுணர்ந்தஅறிவாளிகள் கருத்துக்குப்பிரயோஜனப்படும்அப்படிப்பட்ட அறிவாளிகள் தற்காலத்தில் நாளுக்குநாள் விருத்தியாகிறார்களே அதுதெரியவில்லையா?

வினா. ஆனால், அவர்களெதைஅனுஷ்டிப்பார்கள்?

விடை. **தாயுமானவர் அருளிய ஆசிரியவிருத்தம்.**

அங்கிங்கெனாதபடி யெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி,
அருளொடுநிறைந்ததெது தன்னருள்வெ
ளிக்குளேயகிலாண்டகோடியெல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிரா
ய்த்தழைத்ததெதுமனவாக்கினில்,
தட்டாமனின்றதெது சமயகோடிகளெ
லாந் தந்தெய்வமென்றெய்வமென்,
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்
றதெது வெங்கணும்பெருவழக்கா,
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்,
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவ
து கருத்துக்கிசைந்தததுவே,
கண்டனவெலாமோன வுருவெளியதாக
வுங் கருதியஞ்சலிசெய்குவாம்.

வேதசமாஜத்தார்

அருளிய

**ஸ்தோத்திரங்கள்**

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரகர்த்திருக

மோக்ஷப்பிரத, சர்வக்கிய சர்வசக்தஆன ந்தமய ஸத்ஸ்வரூப அகிருசிய, அத்விதிய, ஏக, பரமபுருஷனாகியகடவுளே! நினை யன்பாலும் நின்பொருட்டுச் செய்யப்படுஞ் சத்கர்மங்களாலும், வணங்குகின்றேம்.

ஓபுருஷோத்தமா ! மஹாபுருஷனாகிய உன்னைஒருவனையே என்றும் மறவாமலும், சிருஷ்டியிலடங்கிய, பூதங்களைத்தொழாமலும், சத்தியமார்க்கத்திலதானே பிரவர்த்திக்கும்படி கடாக்ஷிப்பாயாக.

சர்வசங்கேதகர்மங்களையும் பரித்தியஜித்து ஏகநாயகனாகிய நின்யொருவனையே சரணமடைந்தனம். அடியாரைச்சகலபாவங்களினின்றும் விடுவித்துஅபயம் கொடுத்தருள்வாயாக. ஓம்தத்ஸத்.

இதுவும் ஆசிரியவிருத்தம்,

## காலைவந்தனம்.

ஐந்தாயபொறிகளு மருமையாங்கரணமு
மடங்கியானுறங்குமிரவில்,

ஆதாரமற்றவெனையாபத்துவாராது
வாதரித்தருள்தேவனே,

செய்காரியங்களால் பொய்யுடலாய்க்கிட
சுழித்தியாஞ் சுகவேதுவால்.

கருமேந்திரியங்களும் ஞானேந் திரியங்
களும் பாதுகாத்துப்புதுக்கி,

கைவிடாதிரவெலாங் கொடுமைவந்தணு
காது காப்பாற்றினின்றுபின்னும்,

காலைபோழ்கினில்பேதை துயினின்றெழ
ச்செய்த கருணைவெள்ளப்பெருக்கே,

மெய்மயிர்சிலிர்க்கவுந் துய்யதிருவடிகளை
ச்சேர்ந்தேன்சிரம்பணிந்து,

கரையிலாவன்பொடுங் கைகூப்பிநின்றடி
மை காலைவந்தனஞ்செய்கிறேன்.

## மாலைவந்தனம்.

கரியமேகங்களே வருஷித்த தென்னவே
கடையனுமென்றன்மீது,

கருணைப்பிரவாகம் பொழிந்திடுந் தெய்வ
மே கருதரியசர்வேசனே,

அரியவாழ்நாளிலொரு பெரியநாள்கழிய
வே அந்திபொழுதானவிரவில்,

அடிமையுன் பாதாரவிந்தமனுகித்தொழ
ஆனநற்சமயமைய,

பிரியமுடனுதலாயின்று நானுற்றபலபெ
ருநன்மையாவுமுன்னி,

பெற்றசுகஞானமொடு மற்றபொருள்யா
வையும் ஈய்ந்ததுன் கருணையென்றே,

தெரியவசமோவிதை யெளிதிலறியச்செ
ய்த பேசரியபேரின்பமே,

பேதைப்பெருநன்றியென்றுமறவாமலே
பெருமையாய்த் தொழவருளுவாய்.

என்பதேஅனுஷ்டிப்பார்கள்.

வினா. நம்முடைய வியாசமார்க்கத்தில்இப்பேர்ப்பட்ட வழியிருக்கஅந்நியமதங்களில்சிலர் சேரவேண்டியதென்ன?

விடை. இப்போதேர்ப்பட்ட ஞானமார்க்கத்தையுடையபிரும்மவேதசமாஜம் சுமார்-௱ வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டு இவ்விதவழிகளைப்போதித்துக்கொண்டிருந்தால்நம்முடைய வியாஸமதஸ்தரில் ஒருவராவது அந்நியமதங்களிற் சேர்ந்திருக்கமாட்டார்களென்று நான்சொல்லவேண்டியதே யில்லை. ஆனதால் பிரும்மவேதசமாஜத்தின்பேரில் ஆதியில்சிலர்பழிகூறினாலும்அவர்களே அனுபவத்தில் அதைச்சிறப்பித்து ஆனந்தத்தை அடைவார்களென்பதில் சந்தேகமில்லை.

## இன்னும்.

மேற்படி 'வேதசமாஜத்தார்' முக்கியகருத்தையோசிக்குங்கால், நமது முன்னோர்களால் தோண்டப்பட்டு உபயோகமாகவிருந்த ஊற்றுநீர்தடாகத்தை, பின்புள்ளோர்கள் சுத்திசெய்து உபயோகித்துக்கொள்ள(நடுவேநேரிட்ட பலராசாங்களின் பேதத்தால்) உருபடிசையாயிருந்துவிட்டதால் அவ்வூற்றுநீர் தடாகமானது சிலகாலமாய் பாசிமுதலியஅழுக்கும்படிந்து பரிசுத்தஜலத்தை மறைத்துக்கொண்

டிருக்கிறபடியால், நமது சகோதரர்முத லானவர்களிற் சிலருக்கு தாகமெடுக்குங் காலத்தில்அந்நியரால், தோண்டப்பட்டி ருக்கும் அழுக்குள்ள குட்டை ஜலத்தை அருந்தப் போயதில் அழிந்திப்போகிறார் கள். ஆனதால் மேற்சொல்லிய நமதுஊ ற்றுநீர் தடாகத்தில்உறையும்பாசிமுதலா கியதை நீக்கி உள்ளேயிருக்கும்சுத்தஜல த்தை முன்போல உபயோகிக்கும்பொரு ட்டே வேதசமாஜத்தார்செய்யுமிருந்தஅ ன்புள்ள பிரயாசைக்கு நாமும்உற்சாகத் துடனே கூடியவரையில் பிரயாசைஎடுத் துக்கொள்ளுவோமானால்அது உலகோப காரங்களிற் சிறந்ததாகவிளங்கும்.

## நேரிசைவெண்பா.

வேதசமாஜத்தின் விண்ணப்பங் கற்றோ
ர்கள்
சேதமர்மர்ச்சைவத்தி சேர்வரோ—நீத
மாய்,
எங்குநிறைந்தருளுமோ பிரும்மத்தையே
பொங்குமனதாற் றொழுவர் போற்றி,

| | |
|---|---|
| கூஅகூடு௵ டிசம்பர்மீ கடுவ பெங்களூர். | இங்ஙனம் அறிவோர்க் கன்பன் ஆ-ஐயாசாமிமுதலி யார். |

---

## ஒழிவிலொடுக்கம்.

ஜெகமிருணீக்குந்
தினகரனைப்போல்,
ஜீவர்மயக்கந்
தெளிவுறச்செய்யும்,
வேதசமாஜ
தத்துவபோதினி,
சர்த்தரவர்கட்
கநேகவந்தனம்.

ஐயா ! கல்விகற்றவர்களிற் சிலரும் ம ற்றவர்களிற்சிலரும் விவேக சிகாமணிக ளாகிய வேதசமாஜத்தார் வெகுவினைய முள்ள விண்ணப்பத்தின்கருத்தை தெரி ந்துகொள்ளாமல் கிறிஸ்துமதப் பாதிரிக ளிடத்தில்திரவியம்பெற்றுக்கொண்டுமே ன்மக்கள்கருத்துக்கு விக்கினம்செய்யத் தலைப்பட்டார்களென்றுவிளம்பிக்கொண் டுதிரிகிறார்கள்.

அப்பேர்ப்பட்டகனவான்கள் அறிந்து கொள்ளும்பொருட்டு.

சீகாழி,

திரு-ஞானசம்பந்த சுவாமிகள்

திருவருள்பெற்ற,

கண்ணுடையவள்ளல்

திருவாய்மலர்ந்தருளிய,

## ஒழிவிலொடுக்கமும்.

## அதற்குத்திருப்போரூர்ச்

சிதம்பரசுவாமிகள்,

அருளிச்செய்த

## உரையும்.

சிலஎழுதமனங்கொண்டேன்.

இச்செய்யுளும்இவ்வுரையுஞ்செய்தரு ளியநம்முன்னோர்கள்எந்தபாதிரிகளிட த்தில் திரவியம்பெற்றுக்கொண்டு ஏமார் ந்தார்களோ அதைமேற்கண்ட கனவான் களே சொல்லவேண்டும். ஆனதால்அவர் கள் இதைப்படித்தபின்பாவதுவேதசமா ஜத்தார்கருத்தைத் தெரிந்துக்கொண்டு த ங்கள்தங்கள் ஆத்துமசம்ரக்ஷணை தேடிக் கொள்ளஅவர்களுடன்சேர்ந்துஒப்பற்றப ரப்பிரும்மத்தின்கிருபைக்குப்பாத்திரவா ன்களாவார்களென்று நம்புகிறேன்.

---

பரப்பிரும்மமேதுணை.

## ஒழிவிலொடுக்கம்.

பொதுவிலுபதேசம்.

ஆசாரியர்.
அநாசாரியர்.
குணங்கள்.
குருதோத்திரம்.

## வெண்பா.

வேதாகமப்பவுரி வீசுங்களரசநிலே,

ஆதாரவெற்பிலபிடேகி—பே
திருளிலெழுபாதுவென தொழு
கருணைபொழிவானெடுத்தகை.

## இதன்பொருள்.

வேதாகமங்களுடைய பவுரிக்கூ
ப்பிரம்போடுங் கைவாரங்கொண்
றுத்தும் ஒருண்மைநிலை. ஆறுதா
கிய பொருப்பு அரசன்முடியிற்
ஓர்மகுடம், ஆன்மபோகத்தின் க
டைய ஆணவஇருளக்கிழித்தொழு
ஞானசூரியன் என்பது போதனுசத்
டத்தேஅருளாநந்தத்தைப் பொழிய
றகுரு உயரவெடுத்துக் குறியாகவெ
பொருளைக் காட்டியது திருக்கரமா
எ-று.

அரங்கினிடத்தில்நிர்த்தனஞ்செய்கி
ற கூத்தாடிகள் பலருக்குமுதல்வனுகி
த்தன்வந்து கூத்தைகை வாரங்கொண்
நிறுத்தி அச்சபையினிடத்திலுள்ள
றரசர்களுக்கெல்லாம் முதல்வனுகிய
ரியஅரசனையே புகழ்ந்து காண்பித்துநி
குதல்போல வேதாகமங்கள்கூறிய பலச
மையநெறிகளையும் அச்சமயங்களுக்குறி
ய தேவர்களையுங்கடந்துநின்று அத்தேவ
ர்களுக்கெல்லாமுதல்வனுகிய பரப்பிரும்
மத்தையே குருவினுடைய பரஞானக்க
ண்ணினுலுணர்ந்து புகழ்ந்து சுட்டிநின்ற
தாம்.

வேதாகமங்கள் ஒன்றோடொன்று ஒவ்
வாதுகூறும் பலபேதசமயநெறிகளைக்கூத்
தாக்கினர்.

ஆறுதாரம் ஆறையும் ஊடுருவிநின்றசு
ழிமுனையை, மேருஎன்றும் இடைபிங்க
லைகளை அதனைவலம்வருஞ்சூரியசந்திரர்எ
ன்னும் யோகிகள்சொல்லுவராதலால் ஆ
தாரவெற்பு என்றுரென்பதே.

ஆசாரியனையும் அனுசாரியனையும்,

மாணக்கனுக்கறிவித்தல்.

## வெண்பா.

கூலித் தொழிலாடர் கொண்டுவிற்போற்
போன்றகுரு.

...னிக...
பஞ்ச...ம் அ...
...ரியவும் த...கோர்திரிவ...
டு தாக்கற்றி...ந்த அருளே
ருபாநோக்க... வைத்தமாணுக்க...
டுதலற்றிருக்... வைத்தமேலாகியகு...
ரியனைத் தே...த்திரம்பண்ண ஓர்வச...
மில்லை. தி...னிக்கவெனில் மனமும்...
வனைத்தீண்ட...து. ஆதலால் அக்குருவை
அடைதி, எ-று.

பரமகுருக்குமுமைவாக்கும் தற்போத
முங்கடந்த சிவமென்றறிவிக்க வேண்டி
யவா...தையில்லை தீண்டாமனம் என்று
ரென்பதே.

சரிதைக்*கழற்றி.

## வெண்பா.

நடந்துங்குளித்து மிதுநல்லநாளுணை
விடுந்தொழிலான்மெய் வருந்திவிட்டேன்
—நடங்காதார்,
என்று சுகமேயிருப்பரிப்போதேதுக்கமி
வரக்கென்றெதிற்போயின்பமுதிக்கும்.

---

* கழற்றி, என்பது நீக்குதல்.

சென்றும் நிலத்தில் வீழ்ந்து
தும் இங்ஙனங்கிரியையாளரை
பேய்க்கூட்டங்கள் கோரணிக்கூ
ாட்டும், எ-று.

ரிவு கெடுத்துநிற்பது அருள். சு
ப்வது மருளாதலால் இவர்களைப்
ட்டமென்றும், இவர்த்தொழிலை
ணிகூத்தென்றும், இவர்க்கு ஆன்
மின்மையால் பிறர்க்குக்காட்டுமெ
கூறினர். இதனால்கிரியையாளரை
க்து ஞானிகள் நடையை எடுத்துக்
இவரைப்போலநீங்களும்செய்யா
ன்னசெய்கின்றீரென்று இகழ்ந்துகூ
ாறு காண்க, என்பதே.

யோகக்கிழற்றி.

## வெண்பா.

தைகிரியைகளைச் சற்றுக்கிச்சாகாக்
மயோகத்தைக் கழற்ற — அரிதவர்க்
குத்,
தான்றியதுபொய்யாகக் காண்கையிலே
தோன்றாத
ஊன்றியபேதங்சழலுமோ.

## இதன்பொருள்.

சரிதை கிரியைகளைச் செய்வது அற்ப மெனக்கருதி உடல்நாசமாகாவகை செய்யும் யோகிகளுடைய கிரியா யோகத்தை யாவராலும், நீக்குதற்கரிது. அக்கிரியா யோகிகளுக்கு ஆறுதாரங்களிலும் ஓர்மூர்த்தியைத்தியானித்து அதனைவிட்டு மற்றோர் மூர்த்தியைத் தியானிக்கும்போது முன்தியானித்தது பொய்ப்பொருளாயப் போகத் தமக்கு அனுபவமாகக் காணுமிடத்தும் தெரியாத அதனை மெய்ப்பொருளாய்ப் பிடித்தபோதம் எங்ஙனங் கழலும், எ-று.

தம்மைப்படைத்தழிக்கும் மூர்த்தியை தாம் படைத்தழித்தலால் இவர்க ளறியாமை எப்படி நீங்குமென்பதே.

ஞானம்.

வாதனைமாண்டார்தன்மை.

ண்
பல்லாஞ்சட மன்றுதாக

கின் கண்போற்றி யாது - வை
டுத்தும்
ணமேயென்றழைத்துந் கடிப்புரண்
டழுதுங்
கோரணிகாட்டும் பேய்க்கு ால்.

## இதன்பொருள்.

தத்துவங்களையெல்லாம் இது இதுவென்று தன்னாலறியப்படுதலாலும், ன்னை அவைகளறியாமையாலும் அவற்றைச் சடமென்றறிந்து அவைகளொன்றுடனும் தாக்குதலற்றுச் சத்தாட்டுக் கண்போல் சுட்டறிவுகெட்டுச் சும்மாய்த் திரியாமல் தற்போதனைசத்திருந்தபூரணசிவத்தை அப்போதத்தால்ஓர்வடிவில்ஆவாகனம்பண்ணி அதனைமீட்டுந் தியானம் பண்ணி இங்ஙனம் பூசனைபுரிந்தும், அவ்வடிவைப்பரிபூரண சொரூபமென்று ஓவ்ட்டழைத்தும்அச்சிவம்எங்கணுமில்லை.ஓமகாத்தலங்களில் உண்டென்று கருதி அத்தலங்க

## வெண்பா.

ஞானமில்லர்தவைராக்கிநன்றல்ல
கானவர்க்குந் நோயினர்க்குங் கள்ளர்க்கு
மானதுவே,
னென்னிலைக்கேகின்றுலெ னெவ்விடயத்
தேய்ந்தாலென்
றன்னிழப்பே யின்பாந்தலம்.

## இதன்பொருள்.

அகத்துபரிபூர்ணஞானமில்லாதார்ப்புறத்துச்செய்யும் வைராக்கியம், நன்றல்லவாகும். அஃதெங்ஙனமெனில்மலைக்கானில்சஞ்சரிக்கும் வேடர்களுக்கும் விடாநோயினர்க்கும் பொருள் திருடுங்கள்வர்க்கும் வயிராக்கியமுண்டாவது என்னபிரயோசனம். ஆதலால்இவரது வைராக்கியத்தோடு அவரதுவைராக்கியமொக்கும் அகத்துப் பரிபூரணஞானமுடையார் அரசுரிமை முதலானவை, உலகவியாபாரங்களில் இயாதுநிலையில் நிற்கினும்என்னவனிதாதி விடயங்களில் யாது விடயங்களோடு கூடியிருந்தாலுமென்ன, அந்நிலையும் அவ்விடயங்களும் இவருக்கு இடருமன்று, இன்பமுமன்று. தற்போதவிழப்பே இடரும் இப்போதவிழப்பிற்றென்றும்• இன்பமே இன்பமுமாம், எ-று.

இன்னும் ஆதியோடந்தம் வரைக்கும் உணர விரும்புவோர் அப்புத்தகத்தை வாங்கிக்கொள்ளலாம்.

## ஆ-ஐ-சோ-வெண்பா.

கண்ணுடையவள்ளலார் காட்டுமொழிவி
லொடுக்கம்
நண்ணுஞ்சிதம்பர நாதருரை—எண்ணு
ஞ்சீர்,
தல்லிநிகாவேதசமாஜத்தார் விண்ணப்பம்
நெல்லரிசியன்னமாம்நேர்.

௧௮௯௫௵ டிசம்பர்மீ ௰௨ பெங்களூர்.

இங்ஙனம்.
அறிவோர்க்கன்பன்,
ஆ. ஐயாசாமி முதலியார்.

---

கோயில்வினவிடை இன்னொரு பத்திரிகையில் வரும்.

## உபந்நியாசம்.

அலைகடல் சூழிவ்விரும்புவனத்தின் கண்ணுளபேரிருள்நீக்குவான, குணகடற்றலையின்முளையுற் வெழும்பிரபாகரன் போன்று, பாமரலோகவஞ்ஞானவிருளகற்றுவான்சென்னைமாநகரிலுதித் தோங்கும் சக்கியான தேஜஸாகிய ஓதத்துவபோதினியே!

அடியேனிதனடியிற் கோர்க்கும்சிலவசூரமணிவடங்களை நின்திருமேனியிலணிந்தெய்துவையென உனக்கும், உன்னடியார்க்கும் இட்டமுடன் வந்தனம் மட்டின்றி தந்தனன்.

அன்பர்களே! கடந்தநவம்பர்மாதப்பத்திரிகையினூடாய் சேலம் பஜனகூட்டத்தைப் பற்றிச் சிலவிஷயங்களைச் சங்கிரகமாகக்கூறியிருந்தனனல்லவா? அத்திருச்சபைநாளதுதேதிவரையில் பகவத்சங்கற்பத்தால் அங்ஙனமே சீராக நடந்தேறிவருகிறதென்பதையும், அதில் போனசெவ்வாய்க்கிழமைசர்ச்சிக்கப்பட்ட விஷய மின்னதென்பதையும் நீங்கள் கேட்க சந்தோஷிப்பீர்களென்று அதனையிங்கு வரைந்திடுகின்றனன்.

அஃது ம-௱-௱-ஸ்ரீ இராஜகோபாலாசாரியரவர்களால் பிரசங்கிக்கப்பட்டது. மற்றப்படி நான்இனி விசாரிக்கிறதாகச்சொல்லிவிட்ட அம்சங்களைக்குறித்து இப்பொழுது அவகாசமில்லாமையால் மறுதடவை யதனைப் பரிபூர்த்திசெய்ய நினைத்திருக்கிறேன்.

௨௫-ஆம் தேதி
வேலூர்.

இங்ஙனம் தங்கள்
அன்புள்ளசோதரன்,
சத்தியகாமி.

---

## ப்ரஹ்மணே நமஃ.

அன்புர்களே! நாம் நற்கதியடைவதற்கு நமது நற்செயலே காரணமாகத்தக்கதெனக்கடவுளமைத்திருக்கிறதென்றுமுன்னொருக்கால் எச்சரித்தேனல்லவா. நமது நிலைமைக்குரிய பரிமிதமான அறிவு சக்திமுதலியவற்றின் சுவரூபத்தைமாத்திரம் மனதிற்கொள்வோமாயின் நாம்கதியடைவது கனவிலுமில்லையென்று கெதிகி ஏக்கமுற்று முயற்சியற்று விருத்திகுன்றி கெட்டு முழுகிப்போவோமென்று அதைரியமடைவோம். நாளை வருவதை நாமின்று அறியமாட்டாமையையும், நன்மையைக்கோறிசெய்யும் தொழில் தீமைபயப்பதையும், தீமையைக் கோறிசெய்யும்காரியம் நன்மைவிளைப்பதையும், தினந்தோறும் கண்டுஅனுபவிக்கும் நாம் நமதமிதக்கியதைக்கு சாக்ஷிவிரும்புவோமோ

களைவந்து கண்மூடிய நோயாளியைக்கண்டு தோஷித்துப் போனதாய்பிரமித்து, அன்னங்கொடாமல் வைத்தியர் கொல்லும்உயிர்களெத்தனையோ! குற்றத்தைக் கண்டவிடத் துக்கடியாமல் செல்லங்கொஞ்சித் தட்டிக்கொடுத்துதந்தைகள் துஷ்டராக்கிவிடும் பாலர்களெத்தனையோ! ஜீர்ணசக்தி குறைந்திருப்பதையறியாமல் அளவுமிஞ்சி தின்பண்டங்களை யன்புடனளித்துத் தாய்கள் திராநோயாளிகளாக்கும் குழந்தைகளெத்தனையோ! காலமும் கருவியும் அறியாமலும் ஆசையை வெல்லமாட்டாமலும், அளவற்ற பொருளைத்தோற்றுப் பக்கிரிகளாய்விடும் வர்த்தகர்களெத்தனையோ! கொண்டவர் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் கண்டவரிணக்கத்தால் இன்பமும் சுகமுமடையலாமென மலைத்து, ஈடைகோணி நொடிநேரத்தில் இம்மை மறுமைச்சுகங்களையிழந்து, சீரும் பேருமழிந்து, மானமும் மகிமையும் தொலைந்து, உயிரைவிடமாட்டாமல் தபித்துக்கொண்டிருக்கும் மங்கையர்தானெத்தனையோ! இவ்வாறு தினந்தோறும் நம்மைச் சுற்றிலும் அளவிறந்த திருஷ்டாந்தங்களைக் கண்டபிறகு, நாம்மிதக்கியர்களல்லவென்று யாரேனும் சொல்லத்துணிவாரோ! இவ்வளவுமாத்திரமேயன்று, ஒருவேளை இனிவருவதை நாம் முன்னாடியறிந்திருந்தபோதிலும். அதைநிவர்த்திக்க நமக்குச்சக்தியில்லை. சிலசமயங்களில் ஒருவனுடைய மரணகாலம் தாது முதலியகுறிகளால் முன்னாடிவிளங்கியபோதிலும், இயல்பான காலத்துக்குமேல் அவனை யிரண்டுநிமிஷமாவதிருக்கச்செய்ய நம்மால் முடியுமோ?பாம்புகடித்தால்பிழைப்பதருமையென்று நமக்கு நன்றாய்த்தெரிந்திருந்தும், நாம் அதுகடிப்பதைத் தடுக்கமாட்டுவோமோ? வண்டியொடைந்துவிழுந்தால் நொண்டியாவோமென்பதை நாமறிந்திருந்தபோதிலும் வண்டியையாவது, அதிலேறுவதையாவது, அது ஒடிவதையாவது நாம் எப்போதும் நிவர்த்திப்பது சாத்தியமாகுமோ? இவ்வளவேயன்றி நமக்குச் சில விஷயங்களில் ஆவசியகமான ஞானமும் சக்தியு மிருந்தபோதிலும், இஷ்டமில்லாமற் போவது புதுமையல்ல. அழுகிக்கொண்டிருக்கும் காலையறுக்காவிட்டால் உயிருக்கே மோசம்வருமென அறிந்திருந்தும், அதைநிவர்த்திக்கத்தகுந்த வைத்தியசகாயம் அருகிலிருந்தும் அதை யறுத்துக்கொள்ள மனமின்றி பிராணனைவிடுவோர்எத்தனைபேருளர். இவ்வாறு சகலவிதத்திலும் குறைகளையுடைத்தாகி, காமக்கிரோதாதிஷ்டராகங்களால் பலபக்க மிழுக்கப்பட்டிருக்கிற நாம் நன்மைபுரியவாவது, தீமை வினையாதிருக்கவாவது, அல்லது நாம்செய்தபாவங்களைப் பரிஹரிக்கவாவது முடியுமோவென்று நாம்சங்கிப்பது சகஜமே.

ஆகிலும் இந்த அதைரியத்துக்கு ஆவசியகமின்றி நமது தொழிலின் சுவரூபத்தை விளக்க பிரபஞ்சத்தையும் வேதத்தையும் அருள் கடவுளானவர் அமைத்துவைத்ததுமாத்திரமேயன்றி, தெரியாமற்செய்த குற்றங்களினால் பாவம் விளையாதென்றும். நமது செயலின் சுவரூபத்தை நன்றாயறிந்திருந்தும் பாவம்செய்வோமாகில், பிறகு கசிந்துருகி அனுதாபப்படும்பக்ஷத்தில் அப்பாவம்பரிகரிக்கப்படுமென்றும் அவர் அருளால்நியமித்திருக்கிறார். இந்தநியமத்தை யனுசரித்து சகலதேசங்களிலும் அரசியலுக்குவிதிகளேற்படுத்திய பெரியோர்கள், பிராயச்சித்தகாண்டமென்று ஒருதரும் நூலை யியற்றிருக்கின்றனரென்பது எல்லோர்க்குத் தெரிந்த விஷயம். இன்று இந்தபிராயச் சித்தமென்னும் செயலைக்குறித்து விசாரிக்கக் கருதியிருக்கின்றேன்.

முதலில் இச்சொல்லுக்குப் பொருளென்னவென்று சற்றுயோசிப்போம். பராசரஸ்மிருதிக்கு உரைசெய்த மாதவாசாரியரென்பவர் அதற்குஇரண்டு இலக்கணங்கள்கூறியிருக்கின்றனர். முதலாவது என்னவெனில் 𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌤𑌪𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌤𑌪𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇. (பிராயஃஎன்றால் தபசெனப்படுகிறது. சித்தமென்றால் நிச்சயமென்னப்படுகிறது. நிச்சயத்துடன்கூடியதபசுக்கு பிராச்சித்தமென்றுபெயர், என்பது மேற்படி சுலோகத்துக்குப் பொழிப்புரையாம். இவ்விடத்தில் தபசென்னும் சொல்லுக்கு பவுராணிகர் செய்திருக்கும் பொருளென்று மலைக்கவேண்டாம். பலவருஷகாலம் உண்டியுமுறக்கமுமின்றி தலைகீழாய்நின்றுகொண்டு மண்மூடி புல்முளைத்தும் சலிக்காமல் பலர்தபசுசெய்ததாய்ப் பவுராணிகர் அதிசயோக்தியாய்வர்ணித்திருப்பதல்ல இதற்குப்பொருள், அனுதாபமே தபசாகும். தபசுஎன்பது 𑌤𑌪𑍍 என்னும் வினையடியாகப்பிறந்தபெயர்ச்சொல்லாகும். இந்தவினைக்கு '𑌸𑌂𑌤𑌾𑌪𑍇' அனுதாபப் படுதலென்பது முதற்பொருளாம். '𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍇 𑌚'செல்வத்தோடுவாழ்தலென்பது இரண்டாம்பொருளாம். 'ஜா

ஹெ, எரித்தலென்பதுமூன்ருவது பொருளாம். பின்னிரண்டுகருத்துக்களையொட்டிஇதற்கிவ்விடத்தில் பொருளமையாதாகையால், முதல்வதாகிய அனுதாபமென்பதே இதற்குப்பொருளென்றேற்படுகிறது. மேற்குறித்த லக்ஷணத்துக்குப் பொருளென்னவெனில், அனுதாபப் படுவதாய் வெளிக்குச் செய்யும் பாவனையே பிராயச்சித்த மாகாதென்பதும், உள்ளுற நிச்சயமாகப் படும் அனுதாபமொன்றேபிராயச்சித்த மென்பதுமேயாம். இரண்டாவதிலக்கண மென்னவெனில் ப்ராயஸ்சித்தம் வாரயி க்வாப்வீயதேகாயஅதைய துஷிஷ்டா ப்ராயாஸ்சித்த இதிஸ்ம்ருதி:(பெரும்பாலும் கர்மக்கிரோதாதிகளுக்கு வசப்படாமல்சித்தத்தைச் சமமாய்ச்செலுத்தி பாபநிவர்த்தியின் பொருட்டு செய்யத்தக்க தின்னதென்று எதைக்குழுவினர் நியமித்துச்செய்விக்கிருர்களோ அதுவே பிராயச்சித்தமென்றுஸ்மிருதிசொல்லுகிறது.)என்பது இந்தசுலோகத்தின் பொழிப்புரையாகும். இவ்விரண்டு இலக்கணங்களும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதாய்முதலெடுப்பில்தோன்றும். ஆகிலும் சற்று யோசிப்போமாயின்முதல்சுலோகம் கேவலம் அனுதாபத்தைக் குறித்துப்பிரஸ்தாபிக்கிறதென்றும்,இரண்டாவது சுலோகம் அந்த அனுதாபத்தை விளக்கும்காரியங்களைக்குறித்துப் பிரஸ்தாபிக்கிற தென்றும் விளங்கும். ஆகையால் முதல்சுலோகத்தில் அனுதாபத்துக்கேபிராயச்சித்தமென்றும் இரண்டாம்சுலோகத்தில் அந்தஅனுதாபத்தை யுண்டாக்கத்தக்க காரியத்துக்குப்பிராயச்சித்தமென்றும் பெயர் கூறியதாய்க் கொள்ளவேண்டியது. அனுதாபப்பட்டால் பாபம்திருமென்பது கடவுளின் அமைப்பென அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை யுண்டாக்கத்தக்க காரியங்கள் மனிதர்செய்த சங்கேதமென்று மேற்குறித்தஇரண்டாம் சுலோகத்தினுல்வெளியாகிறது. இந்தஉபநியாசத்தில் நான்பிராயசித்தமெனும்பதத்தை உபயோகிக்குமிடத்திலெல்லாம் மேற்குறித்த சங்கேத கர்மங்களென்றேபொருள் செய்து கொள்ளவேண்டியது. இந்தப் பிராயச்சித்தங்கள் மனுஷிய நிர்மிதமென்றுஏற்படுகிறபடியால் அவற்ருல் கருதப்பட்டபயனையடைய அவற்றின் சுவரூப மெத்தன்மையதா யிருக்கவேண்டும். அவற்றின் பிரவர்த்திக்குச்சமயமெது; அவற்ருல் விளையும் பயனெத் தன்மையானது; என்பது முதலிய பலவிஷயங்களைக்குறித்துத் திரவிசாரித்துத் தெளியவேண்டியது மாத்திரமேயன்றிஅவற்றுள் ஆவசியகமானவற்றை உசிதமான விதமாய் அனுஷ்டிப்பதும் அனுவசியகமானவற்றை விட்டொழிப்பதும்நமது கடமையாகும்.

முதலில்பிராயச்சித்த சுவரூபத்தை விசாரிக்கப்புகுங்கால் அந்தசிக்ஷைமூவகைப்படும். கடவுளால் விதிக்கப்படுவனசிலவும், அவரவர் இனத்தாரால் விதிக்கப்படுவன சிலவுமாம். நமது செயலுக்குச் சிலவிசைகடவுளிப்பிறப்பிலே பயனளித்தபோதிலும்,பெரும்பாலும் மறுபிறப்பிலே யவர் பயனளிக்கிருரென்று அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். அன்றியும் நம்மசெயல்களுக்கும் அவற்றிற்காக கடவுளளிக்கும் பயன்களுக்கு முள்ளசம்பந்தம் நமது மனதுக்கு விளங்கமாட்டாது. ஆகிலும்நாம்அனுதாபப் படுவோமாகில் நாம்செய்தபாவங்கள் நசித்துவிடுவதாகமாத்திரம் அனைவரும் அங்கீகரிக்கின்றன. நமதனுதாபத்துக்கும், நாம்செய்த பாபங்களின் நிவர்த்திக்கும், என்னசம்மந்தமெனச் சிலபேராக்ஷேபிக்கலாம். ஆகிலும் விசேஷப்பிரயாசமின்றி யிதற்குச் சமாதானம் கிடைக்கும், கடவுளையலங்கரிக்கும் அநந்தகலியாணகுணங்களில் நியாயமும்,கருணையுமே தலைமையானவையாம். பாபம்செய்தவனை சிக்ஷிக்காவிடில்அவருடைய நியாயம் நிலையாமற்போகும், நியாயத்தையும், கருணையையும் சமரசப்படுத்துவோமாகில் அனுதாபத்தின்பயன் தாளுய்விளங்கும். நாம்செய்த பாபத்துக்காக கசிந்துருகி, அங்கமெல்லாமொடுங்கி, மனம்வருத்தி துக்கப்படுவதே அனுதாபமாகையால், அம்மனவருத்தமே ஒருசிக்ஷையாகிறது. ஆகிலும் நாம் செய்தபாபங்களின் சுவரூபத்தை யோசிக்குங்கால் நாமவற்றிற்காக அடையவெண்டியசிக்ஷை வெகு பளுவானவையாயிருக்கினும் அவருடைய கருணைப்பிரவாகத்தின் மகிமையால், ஒரு நொடிக்காலம் நாம்படும் அனுதாபமே போதுமான சிக்ஷையென்று அமைந்து நமக்கு நற்கதிகிடைக்கசமயமும்அவகாசமும் ஏற்படுகின்றது. உண்மையான அனுதாபத்தோடு கூடிய பிரும்மத்தியானத்தில் விளையும் விலையற்றபயன்களை நான்வர்ணிப்பதைவிட அவ்விஷயத்தில் வேதம்கூறுவதையுரைப்பது உத்தமமென்று நினைக்கிறேன். பிரசிஞேபநிஷத்து ஐந்தாவது பிரசினத்தில் பிரும்மத்தியானத்தில் நமதுமனதுலயிப்பதற்கனுகுணமான பயன்கிடைக்குமென்று விதித்திருக்கிறது. ஸயஹெநம்

ஸௌவ்யஸுத்ருஸங்ஸங்வப்ருவுஸ்வயோ

𑌹 𑌵𑍈 𑌤𑌦𑍍𑌭𑌗𑌵𑌨𑍍 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌨𑍍𑌤𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 𑌕𑌤𑌮𑌂 𑌵𑌾𑌵 𑌸 𑌤𑍇𑌨 𑌲𑍋𑌕𑌂𑌜𑌯𑌤𑍀𑌤𑌿. 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸𑌹𑍋𑌵𑌾𑌚𑌃 𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮! 𑌪𑌰𑌂𑌚𑌾𑌪𑌰𑌂𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌦𑍋𑌂𑌕𑌾𑌰𑌃; 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍇𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌯𑌤𑌨𑍇𑌨𑍈𑌕𑌤𑌰𑌮𑌨𑍍𑌵𑍇𑌤𑌿, 𑌸𑌯𑌦𑍍𑌯𑍇𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 𑌸𑌤𑍇𑌨𑍈𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑌿𑌤𑌃 𑌤𑍂𑌰𑍍𑌣𑌮𑍇𑌵𑌜𑌗𑌤𑍍𑌯𑌾𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌤𑌮𑍃𑌚𑍋 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌮𑍁𑌪𑌨𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌸𑌤𑌤𑍍𑌰 𑌤𑌪𑌸𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍋𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌭𑌵𑌤𑌿. 𑌅𑌥𑌯𑌦𑌿𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌮𑌨𑌸𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌸𑍋𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 𑌯𑌜𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑍁𑌨𑍍𑌨𑍀𑌯𑌤𑍇 𑌸𑍋𑌮𑌲𑍋𑌕𑌂. 𑌸𑍋𑌮𑌲𑍋𑌕𑍇 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇. 𑌯𑌃 𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑌾 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑍇𑌣 𑌪𑌰𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 𑌸𑌤𑍇𑌜𑌸𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌯𑌥𑌾𑌪𑌾𑌦𑍋𑌦𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑌾𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑌏𑌵𑌂𑌹𑌵𑍈 𑌸𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍁𑌨𑍍𑌨𑍀𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 (இதற்குசைசப்பியரென்னும் சத்தியகாமர், ஒபகவானே! மக்களில் பிரணவமாகிய ஓங்காரத்தைத்தியானிப்பவன் அதினால் எந்தலோகத்தை வெல்லுகிறானென்று கேட்க அவரிவ்வாறு விடையுரைத்தார். ஓசத்தியகாமனே ஓங்காரமேபரமானவும் அபரமானவும்பிரும்மம். ஆகையால்அறிந்தவன் இதனால் இரண்டிலொன்றையடைவான். அவனதைஒருமாத்திரைகாலம் தியானிப்பானாகில் அவன்தினாலே ஞானமடைந்து விரைவில்ஜகத்தில் உண்டாகிறான். அவனை, ருக்குகள் மனுஷியலோகத்தை யடைவிக்கின்றன. அவனவ்விடத்தில் தபசினாலும் பிரும்மசரியத்தாலும் சிரத்தையாலும் நிறைந்தவனாக மஹிமையை அனுபவிக்கிறான். 'இரண்டுமாத்திரைகாலம் அதைத்தியானிப்பானாகில் அவன் அந்தரிக்ஷத்தையடைந்து யஜுஸ்ஸுக்களால் ஸோமலோகத்தையடைகிறான். அவன்மறுபடியும் ஓம் என்னும் அக்ஷரத்தால் மூன்றுமாத்திரைகாலம்பரமபுருஷனை த்தியானிப்பானாகில் ஒளிபொருந்திய சூரியனைச் சேர்ந்து பாம்பு தோலுரிப்பதுபோல் பாபத்தினின்றும் விடுபட்டு ஸாமங்களால் பிரும்மலோகத்தையடைகின்றான்.)என்று சொல்லியிருக்கிறது. கடவுளாலளிக்கப்படும் சிக்ஷையைக்குறித்து இவ்வளவு பிரஸ்தாபித்ததே போது மாகையால், இனி மற்றவிதசிக்ஷைகளைக்குறித்துச்சிலவார்த்தைச் சொல்லுகிறேன். அவையென்னவெனில் துரைத்தனத்தாராலும் இனத்தாராலும் விதிக்கப்படும் சிக்ஷைகளாம். துரைத்தனத்தாரால் செய்யம்படும் சிக்ஷைக்குப் பிராய்ச்சித்தமென்கிற வியவகாரம் சாதாரணமா யில்லாவிடிலும் காரியாம்சத்தில் இவ்விரண்டுக்கும் பேதமில்லை. இந்தசிக்ஷையால் விளையும் பயன்கள் மூன்றுவகையனவாம். முதலாவது, அதினால் அனுதாபமுண்டாகலாமாகையால், எதற்காக அந்தசிக்ஷை விதிக்கப்படுகிறதோஅந்த பாபம் பரிஹாரமாகிவிடும். ௨-வது, அந்த சிக்ஷை போதுமானதா யிருக்கும்பக்ஷத்தில் அந்தபாபியே அத்தன்மையானசிக்ஷைக்கும் அதினால்விளையும் அவமானத்துக்கும் அஞ்சி இனி பாபஞ்செய்யாதிருக்க முயலுவான். ௩-வது, அந்தப்பாபியடைந்த சிக்ஷையைக் கண்டு அயலார்பயமடைந்து, நாமந்தபாவத்தைச் செய்வோமாகில் நமக்கும் அத்தன்மையான தேகசங்கடமும் மனோவேதனையும், அவமானமும், அபக்கியாதியும் வந்துறுமல்லவாவென்று சர்வப் பிரயத்தனத்தாலும் பாவஞ்செய்வதையொழிவார், துரைத்தனத்தார் கடவுளைப்போல் சர்வக்கியருமல்லர்) இனத்தாரை ப்போல் உள்ளறிந்தவருமல்லராகையால், உலகத்தில் செய்யப்படும்பாபங்களெல்லாம் அவர்களுக்குத்தெரியுகிறதுமில்லை. தெரிந்ததையெல்லாம் அவர்கள்சிக்ஷிப்பதும் சாத்தியமல்ல. நாம்செய்யும்பிழைகளில் பெரும்பான்மையும் வெளிக்கேவருகிறதில்லை. பல வெளியானபோதிலும் அவற்றால் துன்பமடைந்தவர் கோர்ட்டு முதலிய விடங்களில்போய்ச் சங்கடங்களைப்பட மனமின்றி, அதைச்சகித்துவருகின்றனர். அவர்களாலும் சகிக்கக்கூடாத சிலகுற்றங்கள்மாத்திரமே துரைத்தனத்தார் அறிக்கைக்கு வருகிறது. அவ்வாறு அறிக்கைக்குவந்தபிறகும், நிஸ்ஸந்தேகமாய் ருஜுவானாலன்றி அவர்கள் சிக்ஷிக்கமாட்டாராகை

யால், உலகத்தில் செய்யப்படுங்குற்றங்களில் நூற்றில் ஒன்றுக்குமேல் சிக்ஷைகிடைப்பதருமை. குற்றங்களைத்தகுந்தபடி தண்டிக்க துரைத்தனத்தாருக்கு அதிகாரமிருந்தபோதிலும், சகலகுற்றங்களையுங் கண்டறிந்து தண்டிக்கக்கடவுள் அவர்களுக்குச் சக்தியளிக்கவில்லை. மேலேவிவரித்த மூன்றுவிதபயன்களையும் தருவனஎவையோ அவையே உத்தமமானசிக்ஷைகளாம். இதுபற்றிதான் கொலைமுதலிய கொடுங்குற்றங்களுக்கு மரணதண்டனை உசிதமல்லவென்று அனேகசாஸ்திரக்ஞியர் அபிப்பிராயப்படுகின்றனர். மரணதண்டனையென்பது வெகுகடுவானதாகையால், கொலையாளிசெய்த பாபத்தைபரிஹரிக்கவும், அன்னியர் இனியத்தொழிலில் செல்லாமல் தடுக்கவும், சமர்த்தராகிலும், பாபத்தைச்செய்தவன் நடைதிருந்தி சீரடைவதற்கு அவகாச மில்லாமற்போகிறது. மரணதண்டனைக்குப்பதில்இதரகடுமையானதண்டனைவிதித்து, உயிரைமாத்திரம் மீத்துவோமாகில் இப்பயனும்கைக்கூடிவருமல்லவா. அன்றியும் மரணதண்டனையானது சாதாரணமாய் அனியருக்கு பீதியைவிளைத்தபோதிலும், சிலர் ஆறிலுஞ்சாவுதான் நூறிலுஞ்சாவுதான்எப்போதேனும் ஒருக்கால் செத்தேதீரவேண்டும் என்றுதைரியங்கொண்டு கொலைசெய்யவும் அஞ்சுகிறதில்லை. இவ்வாறு நொடிநேரத்தில் பிராணவியோகமடைவதற்குப்பதிலாக, ஏதேனும் நீடித்த சிக்ஷையை விதிக்கும்பக்ஷத்தில் அந்ததீர்க்கஉபத்திரவத்துக்குச் சகலரும் அஞ்சுவார்கள். உலகத்தில் கண்கூசாமல் பெருவியாதி, பெருஞ்சொறி,முதலிய அஸஹியமான நோய்களை யுடயவர்களைக் கண்டமாத்திரத்தில் மெய்சிலித்து, மனநடுங்கி. அதைரியமடைந்து,கடவுளேஎனக்குத்தன்மையான சிக்ஷை நேரிடாதிருப்பதாக வென்று மனத்தோடுபிரார்த்திக்கின்றனர். ஜனங்களிடத்திலுள்ள இந்த அனுராகபதத்தை நன்றாய் மனதிற்கொண்ட சிலராஜியங்களில், மரணதண்டனைக்குப்பதிலாக, ஒரு அங்கவியோகம் முதலிய கொடியதானவும் நீடித்தவும் சிக்ஷைகள்விதிக்கப்பட்டு வருகின்றன. சிலவிஷயங்களில் சிக்ஷைவெகு அல்பமாயிருப்பதால் அதினால் கருதப்பட்ட பயன்களிலொன்றும்கைக்கூடிவராமற் போகிறது. தினமெல்லாம் உழைத்தும் அரைவயிற்றிக்கு கஞ்சிகிடைக்காதவன் குற்றஞ்செய்தால் அவனை வெறுங்காவலில் வைத்து சிரமமின்றி உதரபோக்ஷணைக்கு வழியேர்ப்படுத்துவது சிக்ஷையாகுமோ. தனதாயசிக்கும் அவ்விதசிக்ஷை நிலைத்திருக்கவேண்டுமென உள்ளுறப் பிரார்த்திப்பானல்லவா. ஆகையால் எவ்விதசிக்ஷைவிதித்தால் அதனால் கருதப்பட்ட மூவ்வகைப்பயன்களும் கைக்கூடிவருமோ, அதுவேஉத்தமமான சிக்ஷையென நான்மறுபடி யுரைக்கவேண்டியதில்லையென்று எண்ணுகிறேன். இனிஇனத்தார் விதிக்கும் சிக்ஷையைக்குறித்துச் சற்று யோசிப்போம்.

கடைசியாக இனத்தாரால் விதிக்கப்படும் சிக்ஷைக்கேநமது தேசத்தில் சாதாரணமாய் பிராயச்சித்தமென்னும்பெயர் வழங்கிவருகிறது. அன்னியநாட்டாருக்கும்,துரைத்தனத்தாருக்கும் தெரியாத அப்பிரசித்தரும் அப்பிரயோஜகமானவரும்கூட அவரவருடைய இனத்தாருள் அபக்கியாதியையும் அப்பிரதிஷ்டையையும் அடையமனமொப்பமாட்டார். இம்மானிடஜன்மத்துக்குப்பராபேக்ஷையும், இதரருடைய தாக்ஷிண்யமுமின்றி முடியத்தக்ககாரியமொன்றேனுமிராது. துரைத்தனத்தாரைப்போல் பிராயச்சித்தத்தை விதித்துக்கட்டாயமாய் நிறைவேற இனத்தாருக்கு அதிகாரமில்லாவிடினும், பொதுநடத்தைக்கிசையாதவர்களைத்தங்கள் சகவாசத்துக்கு அயோக்கியரென்று நீக்கிவைக்கசுவந்திர ராகையாலும், இனத்தாரனைவராலும் பொதுப்பட ஒதுக்கப்பட்டவன் பலவிததுன்பங்களுக்கு ஆளாகவேண்டியிருக்குமாகையாலும், அவர்கள்விதிக்கும் பிராயச்சித்தம் எவ்வளவு அசஹியமானதாகிலும் அவனவற்றை விதியின்றி ஆசரிக்கக்கடமைப்படுகிறான். இதரநாடுகளில் அந்தந்தகாலதேசவர்த்தமானங்களை யனுசரித்து அவரவருக்குசிதமான பிராயச்சித்தங்களை விதித்துவருகையில் நமதுநாட்டில்மாத்திரம்பலவாயிரவருஷங்களுக்கு ருஷிகளால்ஏற்படுத்தப்பட்டப்பிராய்ச்சித்தங்களையே நாளதுவரையில்ஆசரித்துவருகிறபடியால் அனேகஹேதுக்களைப்பற்றிஅவைஅவற்றால் கருதப்பட்டபயன்களிலொன்றேனும் தருகிறதில்லை. ஆவசியகமான விஷயங்களிலே நாம்செய்துகொள்ளும் பிராயச்சித்தங்களின் சுவரூபமிப்படியிருக்கையில், அனாவசியகமான விஷயங்களில் ஆதாரமேயின்றி செய்விக்கப் படும்பிராயச்சித்தங்களினால் சிலபிராம்மணருக்கு ஜீவனோபாயமாவதுதவிரவேறொரு பிரயோஜனமும் எங்கள்புத்திக்கெட்டவில்லை. அவற்றின் சுவரூபம் நன்றாய்விளங்கும்பொருட்டுப் பஞ்சகவியம் ஸ்ரீபாததீர்த்தம் இவ்விரண்டையும் இவ்விடத்தில் திருஷ்டாந்தீகரித்து விசாரிப்போம். பூர்வத்தில் சென்றுவந்த விதிப்படிக்கு பஞ்சகவியத்தைக் கூட்டும்பக்ஷத்தில் அது எக்காலத்திலும் சிக்ஷையாகவே விளங்கிவந்திருக்கும். முன்னோ

வலம்பித்துவந்த பரிமாணம் பராசரமுனியின் மனதிற் கேற்காமையினால், அதில்சேரவேண்டிய கச்மலபதார்த்தங்களின் பரிமாணத்தைப் பலமடங்கு குறைத்தார். அவர் விதித்தப்பரிமாணப்படி பஞ்சகவ்வியம்கூட்டினாலும் புத்தியுள்ளவர்மனதுக்கு அதுஜுகுப்ஸையாகவேயிருக்கும். கோமூத்ரஸ்ய பலந்தத்யாதங்குஷ்டார்த்தந்து கோமயம், க்ஷீரஸ்ஸப்தபலந்தத்யாத் ததித்ரிபலமுச்யதே. ஆஜ்யமேகபலந்தத்யாத் பலமேகங்குசோதகம். (ஒருபலம் பசுவின்மூத்திரம், கட்டைவிரலிற்பாதியளவு சாணியும், பாலேழுபலமும், தயிர்மூன்றுபலமும், நெய்யொருபலமும், நல்லநீர்ஒருபலமும்சேர்த்து பஞ்சகவியஞ் செய்யவேண்டியது) என்று அவர் விதித்திருக்கின்றனர். சாதாரணமாய்“உன்தலையில் சாணியைக் கரைத்துக்கொட்ட”என்று நாம்திட்டுவதைக் கேட்பதைவிடப் பிராணத்தியாகமாவதுசெய்பலாமென்றுஅதிநீசன்கூடவருந்துவானல்லவா. அந்தசொல்லுக்கே அவன் அவ்வளவு வருந்துவானாகில், உண்மையாகவே அதைக்கரைத்து அவன்தலையிற்கொட்டினால் அவன்படவேண்டிய மனோவேதனையும் எத்தன்மையதாம். இதற்கேயிப்படியாகில் ஆண்பெண்களுடன்மருவி இனத்தாருக்குள் மஹிமையாய் வாழவிரும்புவோன்வாயில் வெறும் சாணியைமாத்திரமேயன்றி அதைமூத்திரத்திலும்கரைத்துவாயிற்கொட்டுவோமாகில், அவன்பிராணனைத்தான்வைத்துக் கொண்டிருக்க விரும்புவானோ? அல்லதுபிழைத்தேயிருந்தாலும் மனிதர்முகத்தில்மறுபடிவிழிக்கமனமொப்புமோ ? உண்ணக்கூடாத பண்டங்களை உண்டவனுக்கு இந்தசிக்ஷைவிதிக்கப்பட்டிருக்கிறது. மற்றொன்றாகிய ஸ்ரீபாததீர்த்தமென்பதோவெனில் ஒருதர்மசாஸ்திரத்தினாலும் அது இன்னவிதாபத்துக்கு சிக்ஷையென்று விளங்கவில்லை. ஒருவனைநோக்கி அவனுக்கு தாழ்ந்தவனுடைய “காலைக்கழுவிக்குடிஎன்றால் அவன் நாக்கையுருகிக்கொண்டு பிராணனைவிடுவானாகையால், ஜலத்திலூறி, வெயிலில்வெடித்து சேற்றுப்புண்ணும் புழுவும் வைத்து, சீழ்பிடித்திருக்கும் காலைக்கழுவிய தண்ணீரைக் குடிப்பதைவிட கொடியசிக்ஷையென்றிருப்பதாய் புத்தியுள்ளவர்மனதில்படமாட்டாதென்பதில் சந்தேகமில்லையாகிலும், அது இன்னபாபத்திற்கு சிக்ஷையென்றுமாத்திரம் விளங்கவில்லை. பிரகிருதத்தில் இவற்றையனுசரிக்கும்மாதிரியைச் சற்றுமனதிற்கொள்வோம். மேற்சொல்லியஅளவு பால், தயிர், நெய், ஜலங்களையும், ஒரு மிளகளவு சாணியையும் இரண்டு மூன்று துளி மூத்திரத்தையும் கலந்து அந்நாற்றத்தையும் அடிக்கமஞ்சளும் நெல்லிப்பருப்பும் சேர்த்து மோர்குழம்புமாதிரியாகப் பஞ்சகவியம் கூட்டுகிறபடியால், வாயிக்குருசியாயிருக்கிறதென்று அனைவரும் மேல்விழுந்து கொசரிக் கொசரி வாங்கித் தாங்கள்மாத்திரம் குடிப்பதுமன்றி, பாபம்செய்ய முற்றும் அசக்தராகிய பல்முளையாச் சிசுக்களுக்கும் அதைவாங்கிப் புகட்டுகின்றனர். அன்றியும் யாரேனும் ஒருபெரியவர்வரும்போது அவருக்கு யாசகம் அவசியம்கொடுத்தேதீரவேண்டியபக்ஷத்தில், நம்மவர் விவேகத்திலும் பக்திரசத்திலும் சிறந்தபுத்திமான்கள் அவருக்குவீணாய்ப்பணத்தை மாத்திரம் கொடுத்து ஏமாறுவதைவிட, அவருக்களிக்கும் பணத்துக்குபதில் அவர்காலைக்கழுவிக் குடித்துவிடுவோமென்று யுக்திசெய்கின்றனர். தலைநோய்முதலிய வியாதிகளைநிவர்த்திக்கமருந்துகள் உதவுகிறவாறு, பாபநிவர்த்திக்குப் பிராயச்சித்தமென்னும் கர்மம் சுவதஹேதுவாகமாட்டாது. பிராயச்சித்தத்தை எவ்வாறு செய்தால் அனுதாபம் ஜனிக்குமென்றுயோசித்துத் தகுந்தபடிசெய்வோமாகில் அதினால்விளையும்அனுதாபம் நமது பாவத்தைவெல்லுமேயன்றி, அனுதாபமுண்டாகாதவரை பஞ்சகவியத்தையாவது ஸ்ரீபாததீர்த்தத்தையாவது குடித்தாலும் அதிலேயே முழுகிக்கிடந்தாலும் பாபம்நசிக்கமாட்டாது. இல்லெனில் ஒருஸ்நானத்தால் சகலபாபங்களையும் போக்குவதென்னும் சேதுவின்கரையிலே நிலையாய்வசித்து தினந்தோறும்அதில்முழுகிக்கொண்டிருப்பவருக்கு எவ்வகைப்பாபமுங்கிடையாதென்றல்லவா சொல்லவேண்டியிருக்கும். ஆகிலும் திவ்யஸ்தலங்களென்றும் திவியதீர்த்தங்களென்றும் வியவஹரிக்கப்படும் இடங்களே சகலவிதகொடியதுர்மார்க்கங்களுக்கு மிருப்பிடமென நமது அனுபவத்தால் விளங்குகின்றதல்லவா. தமக்குள்ளே நிலையாய்வசிப்பவரை பரமதுஷ்டராக்கிவிடும் இந்தஸ்தலங்கள்அவற்றைத்தேடிவரும் அயலாரை எப்படி புனிதராக்குமென்றாலோ, அவர்புனிதராவதுஅந்தஸ்தலங்களின் மஹிமையினாலன்று. ஒருவனையினத்தார் பாபியென்றுநிந்தித்தது, கங்காஸ்நானமென்னும் தண்டனையைவிதித்து, அவன்பெற்றோர் பிறந்தோரையும்பிரிந்து, வெயிலிலும் மழையிலும், பனியிலும், காலால்நடந்து, கள்ளர்க்குப்பயந்து, கைப்பொருளைத்தொலைத்து, தேசாந்திரந்திரிந்து வேளையில்உண

வின்றி உறக்கமுமற்று வருந்துவானுகில் அ
வனைப்பலவருஷம் தண்ணீர்மேலேற்றியத
ற்குச் சமானமாயிருக்குமாகையால் அவன்
ஏக்கமுற்றுக்கதிகி அனுதாபப் படுவானென்
பதில் சந்தேகமுண்டோ. அனுதாபப்பட்டா
ல் பாபம்மறக்குமல்லவா. அவ்வாறு யாத்
திரைசெய்தாலன்றி பாபவிமோசனமில்லை
யாவென்றுலோ வண்டிபல்லக்குகளில் பெ
ண்டுபிள்ளைகளையேற்றிக்கொண்டு பரிசாரக
பரிஜனங்களோடு செல்வானுகில் தேசபேத
த்தால் தேகசவுக்கியம் விருத்தியாகலாமே
யன்றி, அவன் மனதிற் கிலேசமுண்டாக
ஹேதுவில்லை. ஆகையால் முன்செய்தபாப
த்துக்கு அவன் வட்டிசேர்த்துக்கொண்டு மீ
ளுவானேயாகில் பாபநிவர்த்தி யுண்டாகு
மோ. எந்தஹேதுவைப்பற்றியெனிலும் அ
ந்தஸ்தலங்களைமெதித்தால் போதுமென்று
பிரமாணங்க ளிருக்கின்றனவேயெனில் அ
வைமஹிமாவிஷயமேயன்றி உண்மையான
வையல்ல. இல்லையெனில் அவ்விடங்களிலு
ள்ளவருடையபாபபுண்ணியங்களுக்கு வழி
சொல்வதெப்படி. ஆகையால் அவரவர்
மனதின்நிலைமைபாபத்தைப் பரிஹரிக்குமே
யன்றி புண்ணிய ஸ்தலங்களி லல்லவென்
றேற்படும்.

நாம் காரியங்களின் சுவரூபத்தை விசாரி
க்கப்புகுங்கால் அவையாரால் விதிக்கப்பட்
டிருந்தபோதிலும் தாக்ஷிணியமின்றி விசாரி
த்தாலொழிய உண்மை வெளியாகமாட்டா
து. ஆகிலும் விஷயம் ஆக்ஷேபகரமாயிருந்
தால் வியக்திதூஷணம் செய்யவேண்டுமெ
ன்பது என்கருத்தன்று. பிராயச்சித்தகாண்
டமென்பதைச் செய்தவர் மனுஷியரேயா
கையாலும், மனுஷியரெவ்வளவு சமர்த்தரா
கிலும் எவ்வளவு அனுபவமுடையவராகிலு
ம், பலவிஷயங்க ளில்லாவிட்டாலும் ஒரு
விஷயத்திலாவது பிசகுவதுசகஜமாகையா
லும் சரியானவிஷயங்களில் அவர்கள் விதி
யை நாமனுஷ்டிப்பதினுல் அவர்களுக்குப்பூ
ஜியதையாமாகிலும், பழுதானவற்றைக்கை
விடுவதினுல் அவர்களை யவமதிப்பதாய்க்
கொள்ளக்கூடாது. பெரியோர்செய்தவிதி
களும் பழுதிருக்குமோவென்றுசங்கிக்கவே
ண்டாம். ஒருவன்சுக்கிலபக்ஷத்தி லிறந்தாலு
ம், கிருஷ்ணபக்ஷத்திலிறந்தாலும், உத்தரா
யணத்தி லிறந்தாலும் அதற்கு ஒவ்வொரு
பிராயச்சித்தம் விதிக்கப்பட்டு இப்போதும்
அனுஷ்டானத்திலிருக்கின்றன. ஒருவனிறக்
கும்நாள் கிருஷ்ணபக்ஷமாயாவது சுக்கிலப
க்ஷமாயாவது இருக்கவேண்டுமேயன்றி, மூ
ன்றும்பக்ஷமில்லை. அப்படியே மூன்றும் அ
யனமும் கிடையாது. இவற்றிலனைத்திற்கு
ம்பிராயச்சித்தம்செய்யவேண்டுமெனில், நி
ர்தோஷமானகாலம் உலகிலில்லையென்பதா
கருத்து. என்றுல் கடவுள்படைத்தகாலமெ
ல்லாம் தீமைவிளைப்பனவேயென்று கொள்
ளவேண்டியதே. இவ்வாறு தினந்தோறு
ம்பேசினுல் பிராயச்சித்தம் பேசாவிட்டா
ல் பிராயச்சித்தம், நின்றுல்பிராயச்சித்தம்
நிற்காவிட்டால் பிராயச்சித்தம்என்று அனு
வசியகமானவும், அப்பிரயோஜகமானவும்
விஷயங்களிலெல்லாம், பலர்நமக்குப் பிரா
யச்சித்தம் விதிப்பதையும், நாமதை யனுஷ்
டிப்பதையும் சற்றுகவனிப்பவருக்கு பிரஹ
ஸ்பதியின் வாக்கியம் தப்பாமல் நினைவிற்கு
வருமென்று நம்புகிறேன். ததஸ்து ஜீவ

நெரவாயெ ப்ராஹ்மணெ விஹித

ஸ்திஹ (ஆகையால்இவையெல்லாம் தங்கள்
ஜீவனத்துக்கு உபாயமாகபிராம்மணுலே
ற்படுத்தப்பட்டன)என்றவர் சொல்லியிருக்
கிறுர். பூர்வகிரந்தங்களிலுள்ள ஆதாரங்க
ளைக்கொண்டோ இல்லாமலோ நாம் தினந்
தோறும்சகலத்துக்கும் பிராயச்சித்தம் செ
ய்து வருகிறேமென்பது சித்தமாகையால்
அத்தன்மையானபிராயச்சித்தங்களால்விளை
யும்பிரயோஜனமென்பதைச் சற்றுயோசிப்
போம்.

முதலாவது அவை சரியான பிராயச்சி
த்தங்களேயானுலும்அதிபரிசயத்தால் அவற்
றின் சுவரூபமழிந்துவிடுகிறது. அதை யனு
ஷ்டிப்பவர் தினந்தோறும் செய்யவேண்டி
ய அஹன்னியங்களின் லொன்றென அதை
மதித்துச் செய்கின்றனரேயன்றி, அதைப்
பிராயச்சித்தமென்று மதித்துச் செய்யவே
ண்டியவிதமாய் மனோவியாகுலத்துடன்செ
ய்தபிறகாவதுஅவர்கள்மனதில் அனுதாபம்ஜ
னிக்கிறதில்லை. நாம் என்னபாபம் செய்த
போதிலும், பிராயச்சித்த மென்னும் கர்மத்
தைச் செய்வதினுலே நிவர்த்தியாகிவிடுமெ
ன்கிற தைரியத்தாலும்,புத்திபூர்வமாயும்பா
பங்களைச்செய்பவரெத்தனைபேருளர். இந்த
பிராயச்சித்தங்களையாவது யதாக்கிரமமாய்
ச்செய்தால் ஒருவேளை யனுதாபம் ஜனிக்க
லாம். அவற்றிற்குப் பிரதியாக பிராம்ம
ணருக்குப் பொருளளிப்பதே பிரகிருதத்தி
ல் வழங்கிவரும் பிராயச்சித்தமென்றுஅனை
வர்க்குந்தெரியும். ஒருகிருச்சினத்துக்குஇத்
தனைபணம் மாற்றென்று பூர்வத்திலே ஏற்
பாடுசெய்யப்பட்டிருக்கிறது. அதையனுசரி
த்து அபராதரூபமாகஒருவனை நூறுபண
ம் கதறும்படிச் செய்தால் வறுமை மிகுந்
தமுற்காலத்தில் ஒருவேளைஸந்தாபமும்வை

ராக்கியமும் புறப்பது சாத்தியமாகிலும், பிரகிருதத்தில் வைப்பாட்டிக்கென்று பொருளெல்லாம் எழுதிவைக்கும்உயில், பிராயச்சித்தத்துக்குப் பத்துரூபாயென்று ஒருவன்கொடுக்கப்பின்னடைவானோ? அப்படியலக்ஷியமாய்க் கொடுக்கும் அபராதத்தால் பார்ப்பாருக்குப் பிழைப்புண்டெனினும், அதைக்கொடுப்போனுக்கு அது பிராயச்சித்தமாகுமோ! இப்படிக்கன்றி மேற்படி சிருச்சின்னங்களை யதாக்கிரமமாய் நடப்பித்துஇரண்டு மூன்றுதினம் உணவின்றி யாவது கடும்பத்தியத்துடனேயாவது ஒருவனை வருத்தினால் அவனுக்கு மனக்கிலேசமும் அனுதாபமுண்டாமென்பதிலும், அவையுண்டாகவே அவன்பாவமும் நிவர்த்தியாகி, நடையும் சீரடையுமென்பதிலும் சந்தேகமில்லை. அன்றியும் பிராயச்சித்தத்தை சிக்ஷையென்று மதித்து, கசப்புவிழுங்குவதுபோல் மனமின்றி வருத்தத்துடனும் ஜுகுப்ஸையுடனும் செய்தாலன்றி பயனில்லையென்பது தெளிவாய் வெளியாகையில் நம்மவரனுஷ்டிக்கும் பிராயச்சித்தங்களையும், அவற்றைச் செய்யும் நீதியையும், எவ்வாறு ஒப்புக்கொள்ளக்கூடும். பிராயச்சித்தங்களில் யோக்கியதாபுத்தி பிறந்துவிட்டால் அவற்றால் நன்மை யுண்டாகாமை மாத்திரமேயன்றி தீமைவிளைவதற்கும், பஞ்சகவியத்தை மோர்க்குழம்பென்று மதித்துக்குடிக்க விரும்புவோரே அபோஜியபக்ஷத்துக்கு அதுபிராயச்சித்தமாகையால், அதின்நிமித்தமாக சுராபனாதிகள் செய்யத்துணிவது அசம்பாவியமாகுமோ? அவற்றைசிக்ஷையாக மதித்து அவற்றால் கருதப்பட்ட பயன்களெல்லாம் விளையும்படியான மார்க்கத்தில் அவற்றையனுஷ்டித்தல் உத்தமமாகிலும், அப்படிக்கில்லாதபக்ஷத்தில் அவற்றை யடியுடன் ஒழிப்பது அதைக்காட்டிலும் வுத்தமமாகும்.

சிறுவர் துஷ்டத்தனம் செய்தால் அவர்களையடித்தாலும் போதாது. புத்திவந்த பிள்ளைகளைக் கோபிப்பதே போதும், பலர்கண்டு ஸன்மானிக்கத்தக்க பதவியிலிருப்பவர் பிசகினால் அவர்களுடன் பேசாமலிருப்பதே கொடியதண்டனையாய் விளங்கும். இவ்வாறேநாகரீகம் குன்றியகாலத்தில் பிராயச்சித்தங்கள் வெகு கடுமையாயிருக்கவேண்டியதாவசியகமாகிலும், தேசத்தார் விருத்தியடையுந்தோறும், அவற்றின்சுவரூபம், மாறவேண்டியதத்தியாவசியகமாகும். நாகரீகமற்றகாலத்தில்ஜனங்களைப்பயமுறுத்திச் சன்மார்க்கத்தில் நிறுத்தவேண்டியிருக்கும். நாகரீகமுற்ற காலத்திலோவெனில், பதார்த்தசுவரூபங்களை ஐயமற நிரூபித்துவிளக்கி நன்மையைநிலைநிறுத்தவேண்டும். நம்மமுன்னோர் விதித்த பிராயச்சித்தங்களில் சிலபாபநிவர்த்தியின் பொருட்டனவாகினும், சிலநம்மதேஹ மனஸ்ஸவுக்கியங்களைப்பற்றினதாயிருக்கின்றன. சுராபானம் முதலிய சிலகாரியங்களை யதற்கு திருஷ்டாந்தமாகக்கொள்ளலாம். ஏனெனில் சுராபானம் செய்வதிலே பாவமொன்றுமில்லை. ஆகிலும் பித்தமாகிய பதார்த்தங்கள் பழகியபிறகு அவற்றை விடுவது கடினமாகையாலும், அவற்றைமிதம்தப்பிப் பழகுவோருக்குதேகதாரட்டியம் குன்றுவது மாத்திரமேயன்றி, மனமும்தளர்ந்து, மயக்கமுற்று, யுக்தாயுக்த விவேசனம் தப்பிப்போகிறமையாலும், அப்படி புத்திசுவாதீனம்தப்பி யிருக்கிறகாலத்தில் பதார்த்தசுவரூபக் கியானமின்றி கொடியதுன்பங்களை விளைக்கும்படி நேரிடுமாகையாலும், இதரபாபங்களுக்குஹேதுவென்கிற நிமித்தம்அவைநிஷேதமேயன்றி, அவற்றைச் செய்வதிலேயேபாபமுண்டென்பதினாலல்ல. சாதாரணமாய் ஆஹாரநியமங்களைப்பற்றி யவிதிகளெல்லாம் இத்தன்மையான வாகவேயிருக்கும். பிரகிருதத்தில்நாம் பிராயச்சித்தங்களையனுஷ்டிக்கும் ரீதியினால்பலருக்குச் சிலதில் ஹேயபுத்திதோன்ற லாமாகையால்பதார்த்தசுவரூபம் விளங்காவிடில் ஆவசியகவிஷயங்களிலும் அவைகளதை ஹேயமாய் மதிக்கும்படி நேரிடலாம். பிரகிருதத்தில்இதைக்குறித்து விரித்துரைக்க அவகாசமில்லையாகையால், இனிபிராயச்சித்தத்துக்கு இடமும் காலமும் இன்னதென்பதைக்குறித்து சிலவார்த்தைகளைச்சொல்லுகிறேன்.

நம்மமீது சுமந்திருக்கும் உத்தரவாதங்களைக்கிரமப்படி செலுத்தாமற் போனதற்கு விதிக்கப்படும் சிக்ஷையேயல்லவா பிராயச்சித்தம். நம்ம உத்தரவாதங்க ளின்னவையென்று நாமறிந்து கொண்டபிறகே அவற்றைச் செலுத்தவேண்டியகடமை யேற்படுமாகையாலும், அந்தக்கடமை யேற்பட்டாலொழிய அதைச் செலுத்தவில்லையென்கிற தோஷத்துக் கிடமில்லையாகையாலும், அத்தன்மையான தோஷம் ஜனித்தாலன்றி பிராயச்சித்தத்துக்குப் பிரவிருத்தி யில்லையாகையாலும், யுக்தாயுக்தவிவேசனமே கிடையாத அதிபாலிய தசையிலுள்ள சிசுக்கள் செய்யும் எவ்விதச்செயலினாலும் தோஷம் விளையாதென்றும், அதற்குப்பிராயச்சித்தம் வேண்டியதில்லையென்றும் ஸ்பஷ்டமா யேற்படுகிறது. ஒருசிசு மற்றொன்றைக்கொன்றுவிடுமாகில் அதில் பாபமில்லையாவென்றாலோ, அதினால் ஒன்பிராணனுக்கு நஷ்டம் வுள்ளித்த சுவல்பகாலத்தை வெகு சிறந்த

நேரிட்டபோதிலும், அதில்பாபமுமில்லை, அதற்குப் பிராயச்சித்தமுமில்லை. காரியகாரணசம்பந்தத்தையும் அவற்றின்சுவரூபத்தையும் அறிந்து, கொல்லவேண்டுமென்கிற துஷ்டசிந்தையுடன் அச்செயலைச் செய்தாலன்றி அதில் பாபமில்லை. நமதுசெயல் ஒன்றேயாகிலும் நமதுசிந்தைக் கனுகுணமாகஅதின்சுவரூபம் மாறுகிறது. ஒருவன் தன்மக்களையும், மனைவியையும், அன்னியன்மனைவியையும் முத்தமிட்டுக் கொள்வானாகில்,அம்மூன்றிடங்களிலும் காரியமொன்றேயாகிலும், அவற்றின்சுவரூபம் வெவ்வேறென்பதில் சந்தேகமில்லையே. அன்னியன் மனைவியைமுத்தமிட்டுக் கொள்வதை யனைவரும்நிந்திப்பார்களல்லவா. தன்மனைவியை எந்தக் கருத்துடன் முத்தமிட்டுக்கொள்வானோ, அதேகருத்துடன்தன்மகளை முத்தமிட்டுக்கொண்டாலும் நிந்திப்போமல்லவா. துஷ்டனையடிக்கும்உபாத்தியாயரை சிலாகிக்கும் நாமே, குற்றமற்றவரையடிக்கும் திருடனைச்சபிக்கிறோமல்லவா. இதற்கு ஹேதுவென்னவென்றுசற்றுயோசிப்போமாகில், அச்செயல்களுக்குக் காரணபூதமான சிந்தைகளின் வேறுபாடுகளினால் அச்செயல்களின் சுவரூபம்மாறுவதாய் விளங்கும். சிசுக்களுக்கு சுகிருத துஷ்கிருதக்கியானமில்லை யாகையால் அவர்கள் செயலினால் பாபம்விளையுகிறதில்லை. எப்போதுபாபமில்லையோஅப்போது பிராய்ச்சித்தத்துக்கும் பிரவிருத்தியுமில்லை; அதினால் யாதொருபயனுமில்லை. ஒரு சிசுசெய்யும் காரியத்துக்காக அதைசிக்ஷிப்போமாகில் அதுதுன்பத்தை பொறுக்கமாட்டாமல் அழுமாகிலும், தான்செய்ததீமைக்காக அத்துன்பம்நேரிட்டதென்கிற ஞானமாவது, இனியவ்வாறு செய்யக்கூடாதென்கிற நினைவாவது, அனுதாபமாவது அதின்மனதில் ஜனிக்குமோ ? அல்லது அதற்குநேரிட்டசிக்ஷையைக்கண்டு இதரசிசுக்கள் மனதில்பீதியும் அச்சமும்ஜனிக்குமோ ? பிராய்ச்சித்தத்தால் விளையவேண்டிய மூவகைப்பயன்களிலொன்றாவது விளையாதெனில், அந்தப்பிராயச்சித்தத்தினால் யாதொருபயனில்லையல்லவா. குணதோஷக்கியானமில்லாதவரையில் பாபமுமில்லை, பிராயச்சித்தமும் வேண்டியது மில்லையென்னும்பக்ஷத்தில், அத்தன்மையான ஞானமில்லாத வயதுவந்தவர்கள்செய்யுங் காரியங்களாலும் பாபம்விளையாமலல்லவா யிருக்கவேண்டுமென்றுயாரேனும் ஆக்ஷேபிக்கலாம். அந்தஞானத்தையடைவதற்குரியசாதகங்களும் அவகாசமும் போதுமானவரையில் ஒருவனுக்கிருந்தும், அவன்சோம்பேறித்தனத்தினால் கொழுத்து அந்தஞானத்தை யடையாவிடில், அவன்தன்உத்தரவாதத்தைச் செலுத்தவில்லையாகையால், அதினால் விளையும் தீமைகளுக்கெல்லாம்அவன்பாத்தியப்படவேண்டியதகிறது. ஒருவன் எவ்வளவு பிரயாசைப்பட்டபோதிலும், அந்தஞானத்தையடைய அசக்தனாயிருக்கும்பக்ஷத்தில், அவன் ஜடனாவானாகையால் அவனுக்குஉத்தரவாதமில்லையென்பது உண்மையே. உத்தரவாத மில்லாதவரையில் பிராயச்சித்தத்துக்குப் பிரவிருத்தியில்லை. அன்றியும் அனிவாரியமான காரியங்களினால் பாபமில்லை, அவற்றிற்குப் பிராய்ச்சித்தமும்வேண்டியதில்லை. கடவுள்படைத்த அநந்தமான ஆகாசவெளியில்ஒவ்வொரு பரமாணுவளவுஇடத்திலும்,எண்ணரியப் பிராணிகளிருப்பதாய் சூக்ஷமதிருஷ்டிசாஸ்திரத்தின் சகாயத்தால் வெகுஎளிதில் விளங்கும். நாம் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போதும் நம்மால் சேதமடையும் உயிர்களைக் கணக்கிட்டுமுடியுமே ? இதினால் பாவமுண்டெனில்,நாம்கரையேறும்வழியேயில்லையல்லவா.ஆகிலும்இதற்குப் பிராய்ச்சித்தம்செய்துகொள்ளக்கூடாதாவென்றாலோ, ஒவ்வொரு நிமிஷமும்அனிவாரியமாய் நேரிடவேண்டியகாரியங்களுக்குப்பிராயச்சித்தம்செய்துமுடியுமோ. உண்மை யிவ்வாறிருக் கையில் அபுத்திபூர்வமாய்ச் செய்த காரியங்களுக்கும் நம்மவர் பிராயச்சித்தம் செய்விக்கின்றனரென்பது அனைவர்க்குந் தெரிந்தவிஷயம். அபுத்திபூர்வகமாக மானகாரியங்களில் பாவமில்லையெனில், பாபமில்லாமைக்குப்பிராயச்சித்த முண்டென்பது விந்தையாயிருக்கிறது. இதைக் கவ்னிப்போருக்கு மேற்குறித்த பிரஹஸ்பதிவாக்கியம் நினைவிற்குவருமாகையால், இவ்விதபிராயச்சித்தங்களின் உத்தேசியத்தைக் குறித்து நான் விரித்துரைக்கவேண்டியதில்லையென்று நினைக்கிறேன். சுவப்பிரயோஜனங்களைக் கருதுவோர் இத்தன்மையான பிராயச்சித்தங்களை விதிப்பது புதுமையன்று; ஆகிலும் அவற்றை அனுஷ்டிப்பவர் ஒருநிமிஷமாவது அவற்றைக் குறித்து யோசிக்காமற்போவதே விந்தையாகும். பிராயச்சித்தகாண்டத்தையே இவ்விடத்தில் இப்போது கூறி முடியாதாகையாலும், சுவல்பதினத்தில் அது தத்துவபோதினியில் பிரசுரமாகு மாகையாலும், இன்று அதைக்குறித்துப் பிரஸ்தாபிக்கவில்லை.

கடைசியாக பதார்த்தசுவரூப வீசாரத்தில் நம்மபுத்தியைச் செலுத்தி, அவற்றின்தாரதம்மியங்களையறிந்துகொண்டு அனுசிதமானவற்றை யொழித்து, ஆவசியகம் உசிதமானவற்றைச் செய்யாவிடில் நம்மஜன்மத்துக்குப் பயனென்ன. இகத்தில்நமக்குக் கட

தாய் மதித்துப் பயன்படுத்தாவிடில், இனிந மக்குரிய அனந்தகாலமும் துன்பத்தின்பொருட்டேயாகுமல்லவா ஆகையால் நமக்குபுத்தியை யளித்த அவ்வள்ளலைநோக்கி, இஷ்டமும் சக்தியும் அளிக்கவென மேன்மேலும் பிரார்த்தித்துத் தொழுதேற்றுவோமாக. அவரும் நமக்கவ்வித இஷ்டமும் சக்தியும்இணையிலாப்பேரு மளிப்பாராக.

## சந்தாதாரர் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள்அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மறுமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

### சந்தாதாரர்களுடைய அட்டவணை

கூடலூர் - வ, கிருஷ்ணய்யர்...... .......க
பெங்களூர் - ஆ - க, முநுஸாமிபிள்ளை....க
தஞ்சாவூர் - டி - டி, மார்காஸ்சிஸ்...... ...க
பெங்களூர் - பி, பாலகிருஷ்ணபிள்ளை ...க
சென்னை - அப்புக்குட்டிபிள்ளை............க
கும்பகோணம, இராமலிங்கதம்பிரான்....க
பெங்களூர், நாராயணசாமிமுதலியார் ...க

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.
மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.